பக்கங்கள்: 12

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 08 வள்ளுவர் ஆண்டு 2055 ஆவணி 11 செவ்வாய்க்கிழமை 27.08.2024 கதிர் 293

## அபிவிருத்தி, வறுமை ஒழிப்புக்கு

# உண்மையான தீர்வை தரக்கூடிய தலைவருக்கே ஆதரவு தாருங்கள்

## பேராயர் கர்தினால் மல்க்கம் ரஞ்சித் கோரிக்கை

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் பங்குபற்றும் அனைவருக்கும், விரைவாகவும், புத்திசாலித்தனமாகவும் செயற்படுவது மிகவும் அவசியமாகும். கடந்த 75 ஆண்டுகளாக தலைவர்கள் அளித்த வெற்று வாக்குறுதிகளை நம்பியோ, நாட்டின் வறுமையை ஒழிக்க வழங்கப்படும் சிறிய சலுகைகளையோ கண்டு ஏமாறாதீர்கள். மாறாக, இலங்கையின் எதிர்காலத்தை அதன் வளங்களைப் பயன்படுத்தி நாட்டை அபிவிருத்தி செய்வதற்கான உண்மையான திட்டத்தைக்கொண்டுள்ளமற்றும்வறுமைக்கு உண்மையான தீர்வுகளை வழங்கும் ஒரு தலைவரிடம் உங்கள் பொது அறிவைப் பயன்படுத்துங்கள். இந்த முயற்சியில் மக்கள் ஒன்றிணைய வேண்டும் என்று கத்தோலிக்கப் பேராயர் கர்தினால் மல்க்கம் ரஞ்சித் கோரியுள்ளார்.

சட்டத்தை மலினப்படுத்தும் மற்றும் நாட்டின் வளங்களை வெளிநாடுகளுக்கு விற்கும் தலைவர்களை தெரிவு செய்வதன் மூலம், அடிப்படையில் நாமே கழுத்தை ☞2

## இது ரகசியம் அல்ல!

தமிழ்த் தேசியப் பொதுக் கட்டமைப்பினரின் கூட்டம் நேற்று யாழ்ப்பாணத்தில் நடந்தது. ஜனாதிபதி ரணில்விக்கிரமசிங்கவும்எதிர்க்கட்சித் தலைவர் சஜித்பிரேமதாசவும்பொதுக் கட்டமைப்பினரைச்சந்திக்க அழைப்பு விடுத்து அது நிராகரிக்கப்பட்ட பின்னர், பொதுக் கட்டமைப்பிலுள்ள அரசியல் கட்சிகள் மூன்று அந்த முடிவுக்கு மாறாக ஜனாதிபதியையும், இரண்டு எதிர்க்கட்சித்தலைவரையும்சந்தித்துப் பேசின. அதன் பின்னர் நடைபெற்ற கூட்டம் இது.

இந்தக் கட்சிகள் ஏன் அப்படி நடந்துகொண்டன என்று அவற்றின் தலைவர்களின் சட்டையைப் பிடித்து உலுக்குவோம் என்ற ரீதியில் தொலைக்காட்சிப் பேட்டி ஒன்றில் கருத்துத்தெரிவித்திருக்நதார் ஆனால் நேற்றைய கூட்டத்தில் அப்படிக் கட்சிகளின் சட்டையைப் பிடித்து யாரும் உலுக்கியதாக இல்லை. தமிழ் மக்கள் பொதுச்சபைக்காரர்கள் இந்த விவகாரம் குறித்துப் பேசினார்கள். ஆனால் கட்சிக்காரர்கள் அதற்குத் தொடக்கத்திலேயே ஒரு குட்டு வைத்துவிட்டனர். அதனால் அந்த விவகாரம் பெரிதாக வெடிக்காமல் ☞2

## பொன்சேகாவின் கூட்டத்திற்கு வருகை தாராத பொதுமக்கள்



போர்க் கால இராணுவத் தளபதியும் ஜனாதிபதி வேட்பாளருமான சரத்பொன்சேகாவின் கூட்டங்களுக்கு பொது மக்கள் வருவதில்லை என்று சுட்டிக்காட்டப்படுகின்றது.

நுவரெலியாவில்நேற்றுநடைபெற்ற கூட்டத்திற்கும் ஆட்கள் வரவில்லை. இதற்கு முன்னர் அவர் ஒழுங்கு ☞2

## ராஜபக்சக்களின் விசத்தில் வளர்ந்த அமைச்சரவை இன்று ரணிலுடன்

### முன்னாள் அமைச்சர் ரிஷாத் சாடல்

சமூக உரிமைக்காக குரல்கொடுக்கும் எமது கட்சி, பிரதேச அரசியல் நலன்களில் குறுக்கிடுவதில்லை என அகில அலங்கை மக்கள்காங்கிரஸ்தலைவரும்பாராளுமன்ற உறுப்பினருமான ரிஷாட் பதியுதீன் தெரிவித்தார்.

சாய்ந்தமருதில், சனிக்கிழமை நடந்த கட்சியின் இளைஞர் மாநாட்டில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

இங்கு உரையாற்றிய அவர் மேலும் கூறியதாவது,

ராஜபக்சக்களின் விசத்தில் வளர்ந்த அமைச்சரவை இன்று ரணிலிடமே சரணடைந்துள்ளது. இதற்காகவே ரணிலை எதிர்க்கிறோம். அது தவிர ஜனாதிபதி மீது எமக்குத் தனிப்பட்ட கோபங்கள் எதுவும் இல்லை.

இவ்வாறு தெரிவித்தார் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சித் தலைவர், நாடாளுமன்ற உறுப்பினர் ரிஷாத் பதியுதீன்.

சாய்ந்தமருதில், சனிக்கிழமை நடந்த கட்சியின் இளைஞர் மாநாட்டில் உரையாற்றும்போதேஅவர் ☞8



## தமிழ் பொது வேட்பாளரினது தேர்தல் அறிக்கை விரைவில்

தமிழ்த் தேசிய பொதுக் கட்டமைப்பின் சார்பில் நிறுத்தப்பட்டுள்ளதமிழ்பொது வேட்பாளர்அரியநேத்திரனின் தேர்தல் அறிக்கையை விரைவில் வெளியிடுவது என்றுதீர்மானிக்கப்பட்டுள்ளது.

நேற்று யாழ்ப்பாணத்தில் நடந்த பொதுக்கட்டமைப்பின் விசேட கூட்டத்தில் இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

தமிழ்பொதுவேட்பாளரின் தேர்தல் பரப்புரைகள் ☞8

## நோயாளர் காவு வண்டியிலிருந்து திடீரெனக் குதித்த பெண் வைத்தியர்

### தன்னைக் கடத்துகிறார்கள் என்றதனால் பரபரப்பு

நோயாளர் காவு வண்டிச் சாரதி ஒருவர் வவுனியா, நெளுக்குளம் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார். பெண் வைத்தியர் ஒருவர் தன்னை நோயளர் காவு வண்டியில் கடத்திச் செல்ல முற்பாட்டார் என்று முறையிட்டதைத் தொடர்ந்து இந்தக் கைது இடம்பெற்றது.

வீதியில் சென்றுகொண்டிருந்த நோயாளர் ☞8

## ரணிலை ஆதரித்து நேற்று கூவிலில் பரப்புரைக்கூட்டம்

ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் ரணில் விக்கிரமசிங்கவை ஆதரித்து யாழ்ப்பாணத்தில் நேற்று முதலாவது பரப்புரைக் கூட்டம் இடம்பெற்றது.

காங்கேசன்துறை தேர்தல் தொகுதிக்குட்பட்ட கீரிமலை கூவில் சிவானந்தா விளையாட்டு கழக மைதானத்தில் நேற்று இரவு 7 மணியளவில் இடம்பெற்ற இந்தக் கூட்டத்தில் ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதிநிதிகள், இளைஞர்கள், யுவதிகள், பொதுமக்கள் என பலரும் கலந்துகொண்டனர்.

முன்னாள்இராஜாங்கஅமைச்சர் விஜயகலா மகேஸ்வரனின் ஏற்பாட்டில் இந்தக் கூட்டம் இடம்பெற்றது. ☞8

## அதிக வரி நிலுவை என்பது பொய்யாம்

உள்நாட்டு இறைவரித் திணைக்களம், இலங்கை சுங்கத் திணைக்களம், மதுவரித்திணைக்களம் ஆகிய மூன்று பிரதான அரச வருமான மூலங்களில், பெரும்நிலுவைத்தொகை இருப்பதாக வெளியாகும் செய்திகள் உண்மைக்குப் புறம்பானவையாகும் என மதுவரி ஆணையாளர் நாயகம் எம்.ஜே.குணசிறி தெரிவித்தார்.

இந்த மூன்று நிறுவனங்களிலும் நிலுவையில் உள்ள வரித் தொகை 90 பில்லியன் ரூபாய் மாத்திரமே என சுட்டிக்காட்டிய அவர், உலகில் எந்தவொரு நாட்டின் மொத்த வரி வருமானத்தில் 3% - 5% வரையானது ☞2

## மாதாந்தம் 20 ஆயிரம் ரூபாய் ஒரு வருடத்தில் வறுமை ஒழிப்பு

### சஜித் பிரேமதாஸ நேற்று அறிவிப்பு

நுகர்வு, முதலீடு, சேமிப்பு, உற்பத்தி, ஆகியவற்றை மையமாகக் கொண்ட புதிய முயற்சியின் மூலம் மாதாந்தம் 20,000 ரூபா மானியமாக வழங்கப்படும் 24 மாதங்களுக்குள் வறுமையை ஒழிக்கும் நோக்கில் புதிய தேசிய வேலைத்திட்டமொன்று நடைமுறைப்படுத்தப்படும் என எதிர்க்கட்சித்தலைவர் சஜித் பிரேமதாச இன்று சேருவிலவில் தெரிவித்தார். மற்றும் ஏற்றுமதி.

திறமையற்ற அரசின் கொள்கைகளாலும், தவறான நிர்வாகத்தாலும் மக்கள் வறுமையில் விழுந்தாலும் அது நிரந்தரமாக இருக்கக்கூடாது.

யாரையும் நம்பாமல் வலிமையான, சுதந்திரமான வாழ்க்கை வாழும் நம் நாட்டு மக்கள், வறுமையின் அடிமைத்தனத்திலிருந்து விடுபடுவார்கள்.

நுகர்வு, முதலீடு, சேமிப்பு, உற்பத்தி மற்றும் ஏற்றுமதியை மையப்படுத்தி புதிய வறுமை ஒழிப்பு வேலைத்திட்டத்தின் ஊடாக மாதாந்தம் 20000 ரூபா வழங்கப்படும். அதன் ஊடாக 24 மாதங்களுக்குள் வறுமையை ஒழிப்பதற்கானதேசியவேலைத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படும்.

திருகோணமலை மாவட்டம் சேருவிலவில் இடம்பெற்ற பரப்புரைக் கூட்டத்தில் கலந்துகொண்டு ☞8

## ஜனாதிபதி வேட்பாளர்களுடன் மீண்டும் பேச தயாராகின்றோம்

### யாழ்ப்பாணத்தில் ரெலோ நேற்று அறிவிப்பு

ஜனாதிபதி வேட்பாளர்கள் இரண்டாவது கட்டமாக பொதுக் கட்டமைப்பினரைப் பேச்சுக்கு வருமாறு அழைப்பு விடுத்திருக்கின்றனர். அவர்களுடன் மீண்டும் பேசுவதற்குத் தயாராக இருக்கின்றோம் என்று ரெலோ நேற்று அறிவித்தது.

யாழ்ப்பாணத்தில் நேற்று செய்தியாளர்களைச்சந்தித்தபோது அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

தமிழ்த் தேசியப் பொதுக் கட்டமைப்பின் ஊடாக தமிழ்ப் பொது வேட்பாளராக அரியநேத்திரன் போட்டியிடுகின்ற நிலையில் நமது ஆதரவை வழங்கியிருந்தோம். இந்நிலையில், தெற்கிலிருந்து ஜனாதிபதி வேட்பாளராகப் போட்டியிடுகின்ற ரணில்விக்கிரமசிங்கமற்றும்சஜித் பிரேமதாஸ ஆகியோரிடம் இருந்து பேச்சுக்கு வருமாறு அழைப்புகள் கிடைத்தன. அவர்கள் இருவரையும் நாங்கள் சந்தித்தோம். அதற்கான காரணங்களையும் தெளிவுபடுத்தியிருந்தோம். ☞8

காலைக்கதிர் Kalaikkathir

## இனி இது .....

அமத்தப்பட்டுவிட்டது.

ஜனாதிபதியோ எதிர்க் கட்சித் தலைவரோ சந்திப்பதற்கு அழைப்பு விடுத்தால், அதுவும் அவசர அவசரமாக அழைப்பு விடுத்தால் அதனை ஏற்று ஓடிச் சென்று அவர்களைச் சந்திப்பது அடிமைத்தனத்தின் வெளிப்பாடு, பேரினவாதிகளுக்குச் சேவை செய்யும் மனநிலை என்று பொதுச் சபைக்காரர்கள் தரப்பில் காரசாரமாகத்தான் தொடங்கப்பட்டது. அப்படியானால் விடுதலைப் புலிகள் ஆட்சியாளர்களுடன் பேச்சு நடத்தியது அவர்களுக்குச்சேவகம்செய்யவாஎன்றுகேட்ட கட்சிக்காரர்கள் தரப்பு, அழைப்பு விடுத்தால் பேச்சுக்குச்செல்லவேண்டிய காரணங்களை வரிசையாக அடுக்கியது. அதாவது தாங்கள் மக்களின் நலன்களுக்காகத்தான் பேசச் சென்றார்களே தவிர, தமது தனிப்பட்ட நலன்களுக்காக அல்லவாம். அத்தோடு, இப்போது பொது வேட்பாளரின் பரப்புரைக்காக நிதி தேவையாக இருக்கிறது, அதற்காக நிதி சேகரிக்கப் போவதை பிச்சையெடுப்பதாகச் சொல்லமுடியுமா என்றும் கட்சித் தரப்பில் கேட்கப்பட்டதைஅடுத்துபொதுச்சபைக்காரர்கள் அந்த விடயத்தில் வாயை மூடிக்கொண்டனர். அவர்களால் கட்சிகளின் சட்டையைப் பிடித்து உலுக்க முடியவில்லை.

போதாதற்கு அரசியல் நடத்துவது என்பது குந்தி இருந்து பத்திரிகைகளில் கட்டுரைகள் எழுதுவதைப் போன்றதொரு செயல் அல்ல என்றும் கட்சித் தரப்புக்கள் மற்றவர்களுக்குக் குத்திக்காட்டின. இந்த அடியோடு பொதுச் சபைத் தரப்பு கிட்டத்தட்ட முழுமையாகச் சுருண்டுவிட்டது. அதிலொருவர் தான் பயன்படுத்திய வார்த்தைகளுக்காக வருத்தம் தெரிவித்ததுடன் அவற்றைத் திரும்பப் பெறுவதாகவும் அறிவித்தார்.

இருந்தாலும்இதுபோன்றவிவகாரங்களை வைத்துப்பொதுக்கட்டமைப்புக்குள்பிளவுகளை உருவாக்குவதற்கான சதி நடப்பதாக வழமையானசதிக்கோட்பாடுகளையும்அங்கு முன்வைத்தனர். அதற்கு, கட்சிகள்சொல்வதை பொதுச் சபையினர் கேட்கமாட்டோம், ஏற்கமாட்டோம் என்று அடம்பிடித்தால் பிளவு உருவாகத்தானே செய்யும் என்று கட்சிகளின் தரப்பில் விளக்கமளிக்கப்பட்டது. பொதுச்சபை சொல்வதைக் கட்சிகள் கேட்கின்றபோதும் கட்சிகள் சொல்வதை பொதுச் சபையினர் கேட்பதில்லை என்கிற கருத்தும் பகிரப்பட்டது.

நேற்றைய கூட்டத்தில் முக்கியமாக தமிழ் பொது வேட்பாளரின் பரப்புரைக்கான நிதி சேகரிப்புத் தொடர்பிலேயே ஆராயப்பட்டது. பரப்புரையை இன்னும் -முழுவீச்சில் முன்னெடுக்கவேண்டுமானால்நிதி அவசியம் என்று சுட்டிக்காட்டப்பட்டது. நிதியை எப்படித் திரட்டமுடியும்என்பதுகுறித்தும்ஆராயப்பட்டது. புலம்பெயர் பெருமுதலாளிகளிடம் நிதி உதவி கேட்கலாம் என்பது தொடர்பிலும் யார் யாரிடமிருந்து நிதியைப் பெறலாம் என்பது தொடர்பிலும்கூட அங்கு ஆராயப்பட்டது.

அத்தோடு தமிழ் பொது வேட்பாளரின் தேர்தல் அறிக்கை குறித்தும் ஆராயப்பட்டது. அது தொடர்பான அடிப்படை வரைவு ஒன்று பொதுச் சபையினரால் முன்வைக்கப்பட்டது. ஆனால் அது தேர்தல் அறிக்கை வடிவத்தில் இல்லைஎன்றுகட்சிகள்அதனைநிராகரித்தன. அதையடுத்து அதனை தேர்தல் அறிக்கை வடிவில் தயாரித்து மீண்டும் சமர்ப்பிப்பதாக பொதுச் சபையினர் தெரிவித்தனர்.

பொதுவேட்பாளருக்கான ஆதரவு குறித்துப் பேசப்பட்டபோது பொதுச் சபையில் பல அமைப்புக்கள் இருப்பதாகவும், பல்வேறு அமைப்புக்கள் அதற்கு ஆதரவளிப்பதாகவும் தெரிவிக்கப்பட்டபோதும் தமிழ் பொது வேட்பாளரான அரியநேத்திரன் ஏன் ஒரு சிலருடன் மட்டும் அநாதைபோன்று பரப்புரை நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்றார் என்று கட்சிகள் தரப்பில் கேள்வி எழுப்பப்பட்டது. அந்தவிவகாரத்தில் பொதுச் சபையினரை மட்டம்தட்டும் தொனி இருந்தது. பொதுச் சபையினர்அதற்குப்பதில்எதுவும்கூறவில்லை. தாங்கள் வைத்த ஒரு சில கூட்டங்களுக்கு வந்திருந்தபொதுஅமைப்புக்களின்பிரதிநிதிகள் உண்மையில் தமது திட்டத்திற்காக இறங்கி வேலை செய்யக்கூடியவர்களா இல்லையா என்பது அவர்களுக்கு நன்கு தெரியும் என்பதால் அவர்கள் வாயை மூடிக்கொண்டு மௌனமாக இருந்துவிட்டனர்.

தமிழ் பொது வேட்பாளர், அவரை ஆதரிக்கும் பொதுக் கட்டமைப்பில் உள்ள கட்சிகளின் தலைவர்களைச் சந்திப்பதற்கு முன்னர் தமிழ் அரசுக் கட்சியைச் சேர்ந்த சிறீதரனைச் சந்தித்தமை குறித்தும் கட்சிகள் விசனம் தெரிவித்தன. அரியநேத்திரனை ஆதரித்துஅவருக்காகத்தாங்கள்முழுமையாகச் செயற்படுகின்றபோதும்தங்களில்ஒருவரையும் சந்திக்காது, சிறிதரனைப் போய்ச் சந்தித்தது மட்டுமன்றி சங்குச் சின்னத்தை தெரிவு செய்யச்சொன்னதே அவர்தான் என்றுவேறு கூறி தங்களை மலினப்படுத்தியதாகவும் ஒரு குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டது. அதற்கு, தான் சிறீதரனை நட்பு ரீதியாகவே சந்திக்கச் சென்றிருந்தார் என்றும், இரவுச் சாப்பாட்டுக்கு வரச் சொல்லிச் சென்றிருந்த நிலையில்அங்குசெய்தியாளர்கள்இருப்பார்கள் என்று தனக்குத் தெரியாது என்றும் ஏதேதோ சொல்லிச் சமாளித்தார் அரியத்தார். தான் விரைவில், தன்னை ஆதரிக்கும் கட்சிகளின் தலைவர்களைச் சந்தித்துப் பேசுவார் என்றும் உறுதிமொழியளித்தார்.

அவரது தேர்தல் அறிக்கையில் தமிழர் இனப்பிரச்சினைக்கான தீர்வாக தமிழ் மக்கள் பேரவை முன்வைத்த தீர்வுத் திட்டத்தையே முன்மொழிவதாக ஒரு யோசனை தெரிவிக்கப்பட்டிருந்தது. ஆனால், அதனை ஏற்க கட்சிகள் மறுத்துவிட்டன. அந்தத் திட்டத்தைத் தயாரிப்பதில் தமக்குப் பங்கிருக்கவில்லை என்றும் அதில் என்ன இருக்கின்றது என்பது தமக்குத் தெரியாது என்றும் ரெலோ தெரிவித்தது. அதனால் அதனை ஏற்கமுடியாது என்று திட்டவட்டமாக நின்றுகொண்டது. அதையடுத்து அந்தத் திட்டத்தைதீர்வாகமுன்மொழிவதைநீக்குவது என்று முடிவு செய்யப்பட்டது.

வேடிக்கைஎன்னவென்றால்,தமிழ்மக்கள் பேரவையிலும் ரெலோ இடம்பெற்றிருந்தது. விக்னேஸ்வரன் தலைமையில் அந்தப் பேரவையினால் தீர்வுத் திட்டத்தைத் தயாரிக்கவென ஒரு குழு நியமிக்கப்பட்டு, பின்னர் அதன் பரிந்துரைகள் பேரவையில் ஆராயப்பட்டுத்தான் வெளியிடப்பட்டது. ஆனால், அதில் என்ன இருக்கின்றது என்று தனக்குத் தெரியாது என்று இப்போது கூ-றுகின்றார்கள். இப்படிப்பட்ட கட்சிகளை வைத்துக்கொண்டுதான் பொதுவேட்பாளர் ஊடாக தேசத்தை மீளக்கட்டமைக்கப் புறப்பட்டிருக்கிறார்கள் பொதுச் சபையினர். யாரோடு நோவோம்.....!

**இடிமின்னல்**

(idiminnal@gmail.com)

## உண்மையான ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நெரித்துக்கொள்கிறோம் என்றும் அவர் எடுத்துரைத்தார். எந்த ஆளும்தரப்பு ஆட்சிக்கு வந்தாலும் ஈஸ்டர் தாக்குதல் தொடர்பான விசாரணைகள் நியாயமாக நடத்தப்படவேண்டும் எனவும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

இலங்கை அன்னையின் முடிசூட்டு விழாவின் 50வது ஆண்டு நிறைவையும், பசிலிக்கா தேவாலயம் திறந்து வைக்கப்பட்டு அர்ப்பணிக்கப்பட்ட பொன்விழாவையும் முன்னிட்டு ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற ஆசீர்வாத ஆராதனையின் போதே அவர் இந்தக் கருத்துக்களைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

அன்புள்ள சகோதர சகோதரிகளே, நாங்கள் இலங்கையில் ஒரு முக்கியமான தருணத்தை நெருங்கி வருகிறோம். அது என்னவென்று நான் குறிப்பிடத் தேவையில்லை. விரைவில், இலங்கைக்கான புதிய அதிபரை தேர்ந்தெடுப்பதற்கு வாக்களிக்க உள்ளோம்.

இந்த நேரத்தில், அனைத்து இலங்கையர்களுக்கும் நான் ஒரு சிறப்பு வேண்டுகோள் விடுக்கிறேன்: தயவுசெய்து விழிப்புடன் இருங்கள். 75 ஆண்டுகளாக நமது தலைவர்கள் பலவிதமான வாக்குறுதிகளை அளித்து அவர்களின் நலனுக்காக பொய்களை பரப்பிப் பழகியவர்கள்.

இந்தப் பாதையில் நாம் தொடர்ந்து செல்ல முடியாது. இனியும்எங்களைஏமாற்றமுடியாது. நமது விருப்பத்தை வெளிப்படுத்த நமது அறிவுத்திறனைப்பயன்படுத்தவேண்டும்-நாம் பெறும் சிறிய பரிசுகளுக்காக அல்ல, ஆனால் நம் நாட்டின் சிறந்த நன்மைக்காக. இன்று நம் நாடு எதிர்கொள்ளும் முதன்மையான பிரச்சினை வறுமை. இலங்கையில் பலர் மாதாந்த சம்பளத்தில் வாழ முடியாத நிலையில் உள்ளனர். இது சுமார் 60% மக்களை பாதிக்கிறது என்று சொன்னால் அது மிகையாகாது. மக்கள் பிழைப்பு நடத்த முடியாத அளவுக்கு நிலைமை மிகவும் மோசமாகிவிட்டது.

ஏற்கனவே உள்ள இக்கட்டான சூழ்நிலையை மேலும் சிக்கலாக்காமல் நாட்டின் வளங்களை மக்களிடையே சமமாகப் பகிர்ந்தளிக்கும் நியாயமான அமைப்பு இருக்கவேண்டும். முன்னேற்றம் என்பது ஒரு சிலரின் கைகளில் செல்வம் குவிந்துள்ளசமூகத்தைஉருவாக்குவதுஅல்ல, பெரும்பான்மையானவர்கள் வறுமையிலும் பசியிலும் வாழ்கின்றனர்.

எனவே, தங்கள் சொந்த வாழ்க்கையை மேம்படுத்துவதில் மட்டுமே கவனம் செலுத்தும் அல்லது வெளிநாட்டு சக்திகளின் அழுத்தங்களுக்கு அடிபணியக்கூடிய தலைவர்களை நாம் தேர்வு செய்யக்கூடாது. வளங்களைப் பயன்படுத்தி நமது நாட்டை அபிவிருத்தி செய்ய உழைக்கும் குழுவை நாம் தேர்ந்தெடுக்க வேண்டும்.

நாம் நமது தேசிய அடையாளத்தை பாதுகாத்து நமது நாட்டின் சுதந்திரத்தை பலப்படுத்த வேண்டும். வறுமையை ஒழிக்கவும்,நமதுவளங்களைமேம்படுத்தவும், நாட்டை முன்னேற்றவும், ஜனநாயகத்தை மேம்படுத்தவும் நாம் உழைக்க வேண்டும்.

நீதித்துறையின் சுதந்திரத்தை மதிக்கும் தலைமைதான்நமக்கு வேண்டும். நீதிமன்றத் தீர்ப்புகளுக்கு எதிராகச் செயல்படும் தலைவர்களுக்கு வாக்களித்தால் நமக்கு நாமே தீங்கிழைத்துக் கொள்கிறோம்.

இந்த இக்கட்டான நேரத்தில், நமது நாட்டைப் பற்றியும் அதன் சுதந்திரத்தைப் பற்றியும் நாம் நியாயமாகச் சிந்திக்க வேண்டும். உண்மையான ஜனநாயக தலைமையை உருவாக்க நாம் பாடுபட வேண்டும் - வார்த்தைகளில் மட்டுமல்ல, செயலிலும். இது அனைத்து குடிமக்களின் பொறுப்பு.

ஈஸ்டர் தாக்குதல் இன்னும் முழுமையாக விசாரிக்கப்படவில்லை என்பதையும் அனைவருக்கும்நினைவூட்டவிரும்புகிறேன். எந்த அரசு ஆட்சியில் இருந்தாலும் உரிய விசாரணை நடத்தப்பட வேண்டும். ஈஸ்டர் தாக்குதலின்பின்னணியில்உண்மையாகயார் இருந்தார்கள், யார் அதைத் திட்டமிட்டார்கள் என்பதை நாம் தெரிந்து கொள்ள வேண்டும் - மேலோட்டமாகப் பார்ப்பது மட்டும் அல்ல, ஆனால் ஆழமான உண்மைகள். இது நமது உரிமை, அதை நாம் மனதில் கொள்ளவேண்டும்.

எங்கள் அழகான நாட்டைப் பாதுகாக்க நாங்கள் பெற்ற வலிமை மற்றும் தைரியத்திற்காக நாங்கள் கடவுளுக்கு நன்றி கூறுகிறோம். இந்த வலிமையையும் தைரியத்தையும் அதிகரிக்க இறைவனை தொடர்ந்து பிரார்த்திப்போம். நாமும் நம் நாட்டைக்காக்கும்அன்னையிடம்பிரார்த்தனை செய்வோம். ஒவ்வொரு மாலையும் நம் வீடுகளில் ஜெபமாலை ஓதி, நம் தேசத்திற்காக குறிப்பாக ஜெபிக்குமாறு அனைவரையும் நான் கேட்டுக்கொள்கிறேன் - என்றார்.

## பொன்சேகாவின் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

செய்திருந்தகூட்டத்திற்கும்ஆட்கள்வரவில்லை. ஐந்து முதல் 10 பேர் வரையிலானோரே வந்திருந்தனர். நேற்றைய கூட்டத்திற்கும் அதேயளவிலானோரேவருகைதந்திருந்தனர்.

நுவரெலியாபிரதானநகரில்மணிக்கூட்டுக் கோபுரம்அமைந்துள்ளவாகனத்தரிப்பிடத்தில் மேடைஅமைத்துபரப்புரைக்கானஒழுங்குகள் செய்யப்பட்டருந்தன. எனினும் கூட்டத்திற்கு ஆட்கள் சேராதது பொன்சேகாவிற்குப் பெரும் கவலையை ஏற்படுத்தியிருப்பதாகக் கூறப்பட்டது.

அமைக்கப்பட்ட மேடையில் பொன்சேகா உட்பட சுமார் 10 பேர் இருந்தனர் மேலும் மேடையின் முன் போடப்பட்டிருந்த இருக்கைகளில் எதிர்பார்த்த அளவில் பொது மக்கள் வருகைத்தந்து அமரவில்லை.

பொன்சேகா இராணுவத் தளபதியாக இருந்த காலத்தில் அவர் மீது நடத்தப்பட்ட தற்கொலதாக்குதலுக்கு உள்ளான காரையும் தனது பரப்புரைப் பொருளாகப் பொன்சேகா பயன்படுத்தி வருகின்றார். அந்தக் கார் லொறியில் ஏற்றப்பட்டபடி நுவரெலியா மேடைக்கு அருகில் நிறுத்தப்பட்டிருந்தது அதன் காட்சிகள் அடங்கிய புகைப்படங்களும் அங்கு தொங்கவிடப்பட்டிருந்தது.

ஏராளமானபொலிஸார்வரவழைக்கப்பட்டு தீவிர பாதுகாப்பு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தன.

## அதிக வரி ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நிலுவையில்உள்ளவரிஎன்றும்குறிப்பிட்டார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே, மதுவரி ஆணையாளர் நாயகம் எம்.ஜே.குணசிறி இந்தக் கருத்துக்களை வெளியிட்டார். அவர்மேலும்தெரிவித்ததாவது:

மேலும், இந்த மூன்று நிறுவனங்களும் 2023 ஆம் ஆண்டில் வரலாற்றில் மிக அதிக வருமானமாக, 3 டிரில்லியன் ரூபாயைத் தாண்டி வருமானம் பெற்றுள்ளதுடன், 25 ஆண்டுகளுக்குப்பிறகு,முதன்மைக்கணக்கில் மேலதிகத்தை உருவாக்க முடிந்துள்ளது என்றும் தெரிவித்தார்.

நிதி அமைச்சின் கீழ் அரச வருமானத்தை ஈட்டித்தரும் உள்நாட்டு இறைவரித் திணைக்களம், இலங்கை சுங்கத் திணைக்களம், மதுவரித் திணைக்களம் ஆகிய மூன்று நிறுவனங்களும் சட்டக் கட்டமைப்பிற்குள் உரிய வரிகளை வசூலிக்கின்றன. ஆனால் இந்த நாட்டில் அதிகளவு வரி நிலுவை இருப்பதாக ஒரு மாயையைப் பரப்ப சில குழுக்கள் செயல்படுகின்றன.

ஆனால் இந்த மூன்று நிறுவனங்களிலும் நிலுவையாக உள்ள வரிகளின் மொத்தத் தொகை 90 பில்லியன் ரூபாய்க்கும் குறைவு என்பதைக் கூற வேண்டும். அந்த வரி வருமானத்தைச் செலுத்த வேண்டிய நிறுவனங்களில் பெரும்பாலானவை அரச நிறுவனங்கள் என்பதை குறிப்பிட வேண்டும். ஏனைய நிறுவனங்களிடமிருந்து வரிப் பணத்தை வசூலிக்க நீதிமன்றங்களை அணுகியுள்ளோம்.

எனவே, அந்தத் தொகையை ஒத்திவைக்கப்பட்ட வரியாகவே கருத வேண்டும். நீதித்துறை செயல்முறை முடிந்த பிறகு, மீண்டும் வரி வசூலிக்க வாய்ப்பு உள்ளது. மேலும், எந்த நாட்டினதும் மொத்த வரி வருமானத்தில் 3%-5% வரி நிலுவையாக

தொடர்ச்சி 8ம் பக்கம்....



காலைக்கதிர்
Kalaikkathir

# ‘வெல்லும் சஜித்’ கற்பிட்டி பிரதேசத்தின் 18 கிராமங்களுக்கான வேலைத்திட்டம்



(எம் சியாஜ்)

கற்பிட்டியிபிரதேசத்தில்இடம்பெறஉள்ளஜனாதிபதி தேர்தலில் ஐக்கிய மக்கள் கூட்டணியின் ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாஸவை வெல்ல வைக்கும் நோக்குடன் ‘வெல்லும் சஜித்’ என்ற கருப்பொருளில் கற்பிட்டி நகர ஐக்கிய மக்கள் சக்தியின் அமைப்பாளர் எம்.எப்.எம் றில்மியாஸ் தலைமையில் விசேட கூட்டம் ஒன்று குறக்கஞ்சேனை கூட்ட மண்டபத்தில் ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றது.

இதில் புத்தளம் மாவட்ட ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினரும் மாவட்ட அமைப்பாளருமான ஹெக்டர் அப்புஹாமி கலந்து கொண்டார்.

இதில் கற்பிட்டி தொடக்கம் பள்ளிவாசல்துறை வரையான உள்ளாள் 18 கிராமங்களுக்கான தேர்தல் பிரசார நடவடிக்கைகளுக்கான தலைவர்கள் தெரிவு செய்யப்பட்டு அவர்களுக்கான வாக்கெடுப்பு நிலைய இலக்கங்கள் பகிர்ந்தளிக்கும் வேலைத்திட்டம் என்பனவும் கிராம மட்ட மக்கள் சந்திப்புக்கள் எவ்வாறு இடம்பெற வேண்டும் என்பன பற்றிய தெளிவு மற்றும் ஐக்கிய மக்கள் கூட்டணியின் ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாஸவின் வெற்றியை உறுதிப்படுத்தும் முக்கிய செயற்திட்டம் என்பன கலந்துரையாடப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.

(05)

# சூட்சுமமான மரக்கடத்தல் தருமபுரத்தில் முறியடிப்பு








கிளிநொச்சி மாவட்டத்தின் தர்மபுரம் பொலீஸ் பிரிவுக்கு உட்பட்ட புளியம் பொக்கனை பகுதியில் வீதிச் சோதனையில் ஈடுபட்ட பொலீஸாருக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலுக்கு அமைவாக புதுக்குடியிருப்பு பகுதியில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கி பயணித்த கப்ரக வாகனத்தல் சூட்சுமானமுறையில்வாகனத்தின் அடிப்பகுதியில்மறைத்துகொண்டு செல்லப்பட்டபெறுமதிமிக்கபாலை மர குற்றிகள் 32 பொலீஸார் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன.

கப்ரக வாகனத்தின் சாரதியும் பொலீஸாரால் கைது செய்யப்பட் டுள்ளதுடன் பறி முதல் செய்யப்பட்ட மரக்குற்றிகள்கப்ரகவாகனம்சந்தேகநபரையும் இன்று(செவ்வாய்க்கிழமை);கிளிநொச்சி நீதிமன்றம் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தர்மபுர போலீஸ் நிலைய பொறுப்பதிகாரி டி எம் சதுரங்க தெரிவித்துள்ளார். (05 -113)

# விருந்துபசார நிகழ்விற்குச் சென்ற யுவதி திடீரென சுகவீனமுற்று சாவு

சீதாவக்கபுர பிரதேசத்தில் சக ஊழியர்களுடன் இணைந்து விருந்துபசார நிகழ்விற்குச் சென்ற யுவதியொருவர் திடீரென சுகவீனமுற்று உயிரிழந்துள்ளதாக வரக்காபொல பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்த சம்பவம் ஞாயிற்றுக்கிழமை காலை இடம்பெற்றுள்ளது.

நிட்டம்புவ பிரதேசத்தில் உள்ள தனியார் வங்கி ஒன்றில் கடமையாற்றும் வரக்காபொல அம்பேபுஸ்ஸ பிரதேசத்தைச் சேர்ந்த 21வயதுடைய யுவதியொருவரே உயிரிழந்துள்ளார்.

இது தொடர்பில் தெரியவருவதாவது -

உயிரிழந்தயுவதிதனதுவங்கியில்கடமையாற்றும் சக ஊழியர்களுடன் இணைந்து கடந்த 24 ஆம் திகதி சீதாவாக்கபுர பிரதேசத்தில் நடைபெற்ற விருந்துபசார நிகழ்வொன்றிற்குச் சென்றுள்ளார்.

பின்னர், யுவதி இரவு 8.30 மணியளவில் மீண்டும் வீடு திரும்பியுள்ளதோடு இரவு உணவு உண்ணாமல் உறங்கச் சென்றுள்ளார்.

இந்நிலையில், யுவதி அதிகாலை 3 மணியளவில் தனது பெற்றோரிடம் சென்று தான் சுகவீனமுற்று இருப்பதாகக் கூறியுள்ளார்.

இதனையடுத்து, பெற்றோர் யுவதியை வரக்காபொல வைத்தியசாலைக்கு அழைத்துச் சென்ற வழியில் அவர் உயிரிழந்துள்ளார் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

உயிரிழந்த யுவதியின் பிரேதப் பரிசோதனை கேகாலை பொது வைத்தியசாலையில் ஞாயிற்றுக்கிழமைமாலைமேற்கொள்ளப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.(05)

# புதுக்குடியிருப்பில் நடைபெற்ற விவேகானந்த பூங்கா திறப்பு







( வி.ரி. சகாதேவராஜா)

மட்டக்களப்பு புதுக்குடியிருப்பில் அழகாக அமைக்கப்பட்டுள்ள சுவாமி விவேகானந்த பூங்கா ஞாயிற்றுக்கிழமை கோலாகலமாக திறந்து வைக்கப்பட்டது.

இராமகிருஷ்ண மிஷனை ஸ்தாபித்த வீரத்துறவி சுவாமி விவேகானந்தரின் 70 அடி உயர சிலை முதலில் திறந்து வைக்கப்பட்டது.

பின்னர் முத்தமிழ் வித்தகர் சுவாமி விபுலானந்த அடிகள் சேவையின் சின்னம் சுவாமி நடராஜானந்தர் கர்மயோகி சுவாமி ஜீவனானந்த ஜீ மற்றும் சகோதரி நிவேதிதை ஆகியோரின் திருவுருவச் சிலைகள் ஏக காலத்தில் சுவாமிகளால் திறந்து வைக்கப்பட்டன.

திறப்பு விழாவில் பிரதம அதிதியாக தஞ்சாவூர் இராமகிருஷ்ண மிஷன் தலைவர் ஸ்ரீமத் சுவாமி விமூர்தானந்தஜி மஹாராஜ் கலந்து சிறப்பித்தார்கள்.

இந்நிகழ்வுஸ்தாபகதலைவர்க. சற்குணேஸ்வரன் தலைமையில், இலங்கைக்கான இராமகிருஷ்ண மிஷன் தலைவர் ஸ்ரீமத் சுவாமி அக்ஷராத்மானந்த ஜீ மகராஜ் முன்னிலையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் ஸ்ரீமத் சுவாமி விமூர்தானந்தஜி மஹாராஜ் மற்றும் மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி ஜே.முரளிதரன் ஆகியோர் பிரதம அதிதிகளாக கலந்து கொண்டு நிகழ்வைச் சிறப்பித்த அதேவேளை இலங்கை இராமகிருஷ்ண மிஷன் தலைவர் ஸ்ரீமத் சுவாமி அக்ஷராத்மானந்த ஜீ மகராஜ், கொழும்பு சுவாமி இராஜேஸ்வரானந்தா ஜீ மகராஜ், மட்டக்களப்பு கல்லடி ஆச்சிரம பொது முகாமையாளர் ஸ்ரீமத் சுவாமி நீலமாதவானந்தா ஜீ மகராஜ், உதவி பொது முகாமையாளர் ஸ்ரீமத் சுவாமி சுர்ச்சிதானந்த ஜீ மகராஜ், சுவாமி மாத்ருசேவானந்தர் ஜீ மகராஜ் ஆகியோர் சிலைகளை திறந்து வைத்தனர்.

பெருந்திரளான பக்தர்கள் கலந்து கொண்டனர். நிறைவில் பொதுக்கூட்டமும் இடம்பெற்றது.(05)

# உள்ளூர் துப்பாக்கிகளுடன் சகோதரர்கள் இருவர் கைது

உள்ளூரில் தயாரிக்கப்பட்ட இரண்டு துப்பாக்கிகளை தம்வசம் வைத்திருந்தகுற்றச்சாட்டில்சகோதரர்கள் இருவர் ஞாயிற்றுக்கிழமை இரவு கைதுசெய்யப்பட்டுள்ளதாகமடுல்சீமை பொலிஸார் தெரிவித்தனர்.

மடுல்சீமைபொலிஸ்அதிகாரிகளுக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலுக்கு அமைய குறித்த பகுதிக்குச் சென்று தேடுதல் மேற்கொண்ட வெள;வேறு இடங்களில் இருந்து உள்ளூரில் தயாரிக்கப்பட்ட துப்பாக்கிகள் இரண்டு கைப்பற்றப்பட்டன என பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

மடுல்சீமை கல்லுல்ல கீழ் பிரிவு பகுதியைச் சேர்ந்த 52 மற்றும் 47 வயதுடைய சகோதரர்கள் இருவரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளன என பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேகநபர்கள்இருவரையும்நேற்று (திங்கட்கிழமை) பசறை நீதிவான் நீதி மன்றத்தில்ஆஜர்படுத்துவதற்கானநடவடிக்கைகளைமேற்கொண்டுவருவதாக பொலிஸார் தெரிவித்தனர்.(05)

காலைக்கதிர்
Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## கவர்ச்சிகரமானதல்ல

**தேசிய மக்கள் கூட்டணி எனப்படும் தேசிய மக்கள் சக்தியாகிய ஜேவிபியின் தேர்தல் அறிக்கை நேற்று வெளியிடப்பட்டுள்ளது. எதிர்பார்க்கப்பட்டபடியே அதில் தமிழர்களின் பிரச்சினைக்கான தீர்வு குறித்து திட்டவட்டமாக எதுவும் தெரிவிக்கப்படவில்லை.**

**» 2015–2019 புதிய அரசிலமைப்பொன்றினை தயாரிப்பதற்காக கடைப்பிடித்த செயற்பாங்கினை துரிதமாக நிறைவு செய்து சமத்தவம் மற்றும் சனநாயகத்தை அடிப்படையாகக் கொண்ட ஒரே நாட்டிற்குள் அனைத்து மக்களும் ஆட்சியில் தொடர்புகொள்ளக்கூடியவாறு ஒவ்வொரு உள்ளுராட்சி நிறுவனத்திற்கும் மாவட்டத்திற்கும் மற்றும் மாகாணத்திற்கும் அரசியல் ரீதியானதும் நிர்வாக ரீதியானதுமான அதிகாரத்தை பகிர்ந்தளிக்கின்ற அரசாளுகைக்கான அனைத்து இனத்தவர்களினதும் அரசியல் பங்காண்மையை உறுதி செய்கின்ற புதிய அரசமைப் பொன்றினை தயாரித்தல்.**

**» ஒரே நாட்டுக்குள் அனைத்து மக்களையும் ஆட்சியில் தொடர்புபடுத்தக்கூடியவாறு ஒவ்வொர் உள்ளுராட்சி நிறுவனத்திற்கும் மாவட்டத்திற்கும் மற்றும் மாகாணத்திற்கும் அரசியல் மற்றும் நிருவாக அதிகாரங்களை உறுதிசெய்தல்.**

**» தற்போது காலவரையறையின்றி பிற்போடப்பட்டுள்ள மாகாண சபைகள் மற்றும் உள்ளூர் அதிகார சபைகள் தேர்தலை ஒரு வருடத்திற்குள் நடத்தி மக்கள் நிர்வாகத்தில் பங்குகொள்வதற்கான வாய்ப்பினை வழங்குதல்.**

**» சட்ரீதியான அதிகாரங்களைக்கொண்ட பாரபட்சத்திற்கு எதிரான ஆணைக்குழு ஒன்றினைத் தாபித்தல்.**

**» வடக்கு கிழக்கு உள்ளிட்ட ஏனைய பிரதேசங்களில் கடந்த காலத்தில் இடம்பெற்ற மெசியல் படுகொலைகள், காணாமல்போகச்செய்வித்தல்கள் மற்றும் ஆட்கடத்தல்கள் பற்றிபுலன்விசாரணைமேற்கொண்டுநீதியைநிலைநாட்டுதல்.**

**» இனவாதம் மற்றும் மதத் தீவிரவாதம் காரணமாக இடம்பெற்றுள்ளவன்முறைச்சம்பவங்களைபுலன்விசாரணை செய்வதற்கான உண்மை மற்றும் மீளிணக்கத்திற்கான ஆணைக்குழுவின் செயற்பாட்டினை விரிவாக்குதல்.**

**» அரசியல் கைதிகளை விடுதலை செய்தலும் அவர்கள் சுதந்திரமாக சமூகமயமாதலை உறுதிப்படுத்துதல**

**» பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்தை உள்ளிட்ட அடக்குமுறைசார்ந்த அனைத்துச் சட்டங்களையும் இல்லாதொழித்து அனைத்த மக்களினதும் சுதந்திரத்தை உறுதிசெய்தல்.**

**» இனக்கட்டமைப்பை மாற்றியமைக்கும் குறிக்கோளுடன் மேற்கொள்ளப்படும்**

**» மக்கள் குடியேற்றங்களை நிறுத்துதல்.**

**» அனைத்துப் பிரஜைகளும் தமது மொழியில் சேவைகளைப் பெற்றுக்கொள்ளக்கூடிய வகையிலான தேசிய மொழிக் கொள்கையொன்றை அமுலாக்குதல்.**

**» தமிழ் மற்றும் முஸ்லிம் மக்கள் கூடுதலாக வாழ்கின்ற வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் உள்ள பொலிஸ் நிலையங்கள், அரச அலுவலகம் போன்ற சிவில் சேவைகள் நிலவும் இடங்களில் தமிழ் மொழியில் பணிகளை ஆற்றக்கூடியதாக உத்தியோகத்தர்கள், பணியாளர்கள் மற்றும் ழிபெயர்ப்பாளர்களை நியமித்தல்.**

**இவைதான் வடக்கு கிழக்கு மக்களோடு தொடர்புபட்டதாக அந்தத் தேர்தல் அறிக்கையில் இருப்பவை. அரசியல் கைதிகள் விடயம், இனப்பரம்பலை மாற்றியமைக்கும் குடியேற்றங்கள், மாகாண சபைத் தேர்தலை நடத்துதல் போன்ற சில பல முன்னேற்றகரமான விடயங்கள் இருக்கின்றன. ஆனாலும் தமிழ், முஸ்லிம் மக்களின் பிரச்சினைக்கான தீர்வு தொடர்பில் காத்திரமான விடயங்கள் எவையும் இதில் இல்லை. முக்கியமாக அரசியல் தீர்வு குறித்து எதுவும் இல்லை.**

**ஜேவிபி வழக்கமாகப் பேசும் அதிகாரப் பரவலாக்கம் குறித்தே இதிலும் குறிப்பிடப்பட்டுள்ளது. அந்த வகையில் இந்த அறிக்கை தமிழ் மக்களைக் கவரக்கூடிய ஒன்றல்ல என்பது திண்ணம்.**




# கூகுள் எனும் ஏகாதிபத்தியம்

**சு. வெங்கடேஸ்வரன்**

ஏகாதிபத்தியம் எனும் வார்த்தை அரசியலிலும், பொருளாதாரத்திலும் அதிகம் புழங்கும் வார்த்தைதான். அரசியலில் ஏகாதிபத்தியம் என்பது அனைத்து அதிகாரங்களும் ஒரே இடத்தில் குவிந்திருப்பது, அதாவது தலைமைப் பொறுப்பில் இருப்பவரின் வார்த்தையே ஒரு நாட்டின் சட்டம். தனது பண, ஆயுத பலத்தால் மற்ற நாட்டையும் மக்களையும் அடக்கி ஆள்வது ஏகாதிபத்தியத்தின் அடுத்த பரிணாமம்.

பொருளாதாரத்தில் ஏகபோகம், ஏகாதிபத்தியம் என்பது ஒரு பொருள் அல்லது சேவை ஒரு நபரிடம் அல்லது ஒரு நிறுவனத்திடம் மட்டுமே கிடைக்கும். அந்த பொருள் அல்லது சேவைக்கு அவர் வைப்பதுதான் விலை. அந்த விலையைக் கொடுத்துதான் மக்கள் அவற்றைப் பெற முடியும். அதாவது சந்தையில் போட்டியே இல்லாத நிலை.

இப்படிப்பட்ட நிலை உருவாவது நுகர்வோருக்கு அதாவது மக்களுக்கு அதிக பாதிப்பை ஏற்படுத்தும் என்பதால்தான் பல்வேறு நாடுகளில் நிறுவனப் போட்டிச் சட்டங்கள் உருவாக்கப்பட்டன. இதன் மூலம் பொருள் மற்றும் சேவைகள் சந்தையில் ஆரோக்கியமான போட்டி இருப்பது உறுதி செய்யப்படும். எந்த பொருள் அல்லது சேவையை ஒரு நிறுவனம் மட்டுமே விற்பனை செய்யக் கூடாது. ஒன்றுக்கும் மேற்பட்ட விற்பனையாளர்கள் சந்தையில் இருக்க வேண்டும். ஆனால், பெருநிறுவனங்கள் இந்த விதிகளை மீறுவதும், நுகர்வோர் பாதுகாப்பு அமைப்புகளும் நீதிமன்றங்களும் அவற்றைச் சுட்டிக்காட்டி குட்டு வைப்பதும் தொடர் நிகழ்வாக உள்ளது.

### கூகுள் ஐ/ஓ நிகழ்வில் சுந்தர் பிச்சை

கூகுள் ஐ/ஓ நிகழ்வில் சுந்தர் பிச்சையூ-டியூப்

அந்த வகையில் உலகின் தேடுபொறி நாயகனான கூகுள் நிறுவனம் அமெரிக்க நீதிமன்றத்தின் கடும் கண்டனத்தில் சிக்கியுள்ளது. பல்வேறு நிறுவனங்கள் தயாரிக்கும் கைப்பேசி, டேப்லட், ஸ்மார்ட் வாட்ச், வெப் பிரௌசர் என அனைத்திலும் தனது கூகுள் தேடுபொறியை (சர்ச் என்ஜின்) மட்டுமே பயன்படுத்த வேண்டும் என்பதற்காக ரூ.2.18 லட்சம் கோடியை (26 பில்லியன் டாலர்) கூகுள் நிறுவனம் கைப்பேசி உள்ளிட்ட மின்னணு பொருள்கள் தயாரிப்பு



நிறுவனங்களுக்கு அளித்துள்ளது. இதன் மூலம் நிறுவனங்கள் போட்டிச் சட்டத்தை மீறி தன்னை ஏகாதிபத்திய நிறுவனமாக கூகுள் முன்னிறுத்தியுள்ளது. மேலும், அந்த ஏகாதிபத்தியத்தை தக்கவைக்கும் முயற்சியில் தொடர்ந்து ஈடுபட்டு வருகிறது.

இணையத்தில் தகவல்களைத் தேட பயனர்கள் கூகுளைத்தவிர வேறு எதையும் பயன்படுத்தக்கூடாது என அந்த நிறுவனம் திட்டமிட்டு செயல்பட்டுள்ளது. இப்போதைய நிலையில் 89.2 சதவீத அறிதிறன் பேசிகளில் (ஸ்மார்ட்போன்) கூகுள் தேடுபொறி மட்டுமே பயன்பாட்டில் உள்ளது. இதன் மூலம் இணையதளத்தில் தகவல்களைத் தேடுவதற்கு கூகுளை மட்டுமே பயன்படுத்தும் நிலையை உருவாக்கியதுடன், தங்கள் நிறுவனம் மூலம் இணையத்தில் விளம்பரங்களை வெளியிடுவதற்கான விலையையும் அவர்கள் தொடர்ந்து அதிகரித்து வந்துள்ளனர். இதன் மூலம் இரு மாபெரும் முறைகேடுகளை கூகுள் செய்துள்ளது என்று நீதிமன்றம் சுட்டிக்காட்டியுள்ளது.

நீதிமன்றத்தின் தீர்ப்புக்கு கட்டுப்பட்டு நடக்க வேண்டிய நிலைக்கு கூகுள் தள்ளப்பட்டுள்ளது. இதன் முதல்படியாக புதிய அதிதிறன்பேசிகள் வாங்கும்போதே அதில் கூகுள் தேடுபொறி மட்டும் இருக்கும் என்ற நிலை மாறவாய்ப்புள்ளது. இதனால் மைக்ரோசாஃப்ட் நிறுவனத்தின் தேடு பொறியான 'பிங்', ஒரு காலத்தில் முன்னணியில் இருந்து இப்போது தேடிக் கண்டுபிடிக்கும் நிலைக்கு தள்ளப்பட்டுள்ள 'யாஹு' உள்ளிட்டவற்றின் பங்களிப்பு அதிகரிக்க வாய்ப்புள்ளது.

ஆனால், இது ஆப்பிள், சாம்சங் மற்றும் விவோ உள்ளிட்ட சீன கைப்பேசி நிறுவனங்களின் வருவாயைப் பாதிக்கும். ஏனெனில், கூகுள் நிறுவனம் பெருமளவில் தொகை இந்த நிறுவனங்களுக்குச் செலுத்தி தங்கள் தேடு பொறியை அறிதிறன்பேசி விற்பனைக்கு வரும் முன்னரே அதில் நுழைத்திருந்தது.

இணைய தேடுபொறி பிரிவில் கூகுள் நிறுவனம் செலுத்திவரும் ஏகாதிபத்தியத்தை முடிவுக்குக் கொண்டு வரும் வகையில் நீதிமன்றத்தின் தீர்ப்பு அமைந்துள்ளது. கொலம்பியா மாவட்ட நீதிமன்றத்தின் இந்தத் தீர்ப்பை எதிர்த்து கூகுள் மேல்முறையீடு செய்யவுள்ளது.

எனினும், இப்போது வழங்கப்பட்ட தீர்ப்பு மூலம் 'உலக மக்களால் அதிகம் விரும்பப்படும் தேடுபொறி கூகுள்' என்று உருவாக்கப்பட்டிருந்த பிம்பத்தில் சிறு விரிசல் விழுந்துள்ளது. மக்களின் கைப்பேசியில் தன்னை திணித்துக் கொண்டதன் மூலமே அது முன்னிலை பெற் என்ற சந்தேகமும் எழுந்துள்ளது.

### கூகுள் மேப்

இணையப் பயன்பாடு என்பது பெரும்பாலான மக்களுக்கு பொழுதுபோக்கின் ஒரு பகுதியாக உள்ளது. அதிலும் அறிதிறன்பேசி வருகைக்குப் பிறகு பொழுதுபோக்குச் செயலிகள்தான் 99 சதவீத அறிதிறன்பேசிகளில் அதிக இடம் பிடித்துள்ளன. பயன்பாட்டிலும் அவையே முன்னணியில் உள்ளன.

பார்வையாளர்கள் அதிகம் என்பதால் இதுபோன்ற செயலிகளில் விளம்பரங்கள் வருமானமும் அதிகம். இந்த வருமானத்தைப் பங்கிட்டுக்கொள்வதில் ஒருதாய் மக்களான கூகுள், யூடியூப், மெட்டா நிறுவனத்தின் பேஸ்புக், இன்ஸ்டாகிராம் உள்ளிட்டவை முக்கியப் பங்கு வகித்து வருகின்றன. எனவே, போட்டியாளர்கள் உருவாகிவிடக் கூடாது என்பதிலும், அதையும் மீறி போட்டி உருவானால், அந்த நிறுவனத்தை எந்த விலை கொடுத்தாவது வாங்கிவிடுவது என்பது இந்த நிறுவனங்களின் உத்தியாக உள்ளது.

தகவல்தொழில்நுட்பத்துறை என்பது நாளுக்குநாள் புத்தாக்கம் அடையும் திறனுடையது என்பதே அதன் முக்கிய சிறப்பம்சம். ஆரோக்கியமான போட்டி நிலவுவதே எந்தத் துறையும் புதுமைகள் உருவாக வழியை ஏற்படுத்திக் கொடுக்கும். ஆனால், தேடுபொறி விஷயத்தில் கூகுள், போட்டியாளர்களை வளரவிடாமல் தடுத்து ஏகாதிபத்தியனாக செயல்படுகிறது என்பதை உலக மக்களுக்கு நீதிமன்றம் வெளிச்சம் போட்டுக் காட்டியுள்ளது.

# கொழும்பில் ஒருவர் அடித்து கொலை

## இளைஞன் கைது

கொழும்பு, மருதானை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட தேவநம்பியதிஸ்ஸ மாவத்தையில் நபரொருவர் அடித்து கொலை செய்யப்பட்டுள்ளார் என மருதானை பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த கொலை சம்பவம் ஞாயிற்றுக்கிழமை இரவு இடம்பெற்றுள்ளது. 44 வயதுடைய நபரொருவரே இவ்வாறு கொலை செய்யப்பட்டுள்ளார்.

கொலை செய்யப்பட்டவருக்கும் இளைஞன் ஒருவருக்கும் இடையில் ஏற்பட்ட தனிப்பட்ட தகராறு காரணமாக இந்தத் தாக்குதல் இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இதனையடுத்து, காயமடைந்தவர் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட பின்னர் உயிரிழந்துள்ளார்.

இந்த கொலை சம்பவம் தொடர்பில் வெலிமடை பிரதேசத்தைச் சேர்ந்த 19 வயதுடைய இளைஞன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை மருதானை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.(05)

# குறிகாட்டுவானில் பொதுமகனை தாக்கிய பொலிஸ் அலுவர் பணியிடை நீக்கம்

மதுபோதையில் கடமையில் இருந்த பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் பொதுமகனை தாக்கிய நிலையில் பணியிடை நீக்கம் செய்யப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் குறித்து மேலும் தெரியவருகையில் –

ஊர்காவற்துறை பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் சனிக்கிழமை இரவு மது போதையில், குறிகாட்டுவான் பகுதியில் கடமையில் இருந்திருந்தார். இதன்போது, வீதியால் சென்ற பொதுமகனிடம் இலஞ்சம் பெற முயன்றதோடு அவர்மீது தாக்குதலும் மேற்கொண்டுள்ளார்.

இது குறித்து பாதிக்கப்பட்ட நபர் ஊர்காவற்துறை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவுசெய்திருந்தார். அந்தவகையில் குறித்த பொலிஸ் உத்தியோகத்தரை ஊர்காவற்துறை பொலிஸார் கைது செய்து நீதிமன்றத்தில் முற்படுத்தியிருந்தனர்.

இந்நிலையில் குறித்த பொலிஸ் உத்தியோகத்தரை தலா ஒரு லட்சம் பெறுமதியிலான இரண்டு ஆள் பிணைகளில் செல்வதற்கு அனுமதியளித்திருந்தார். அத்துடன் அவர் பணியிடை நீக்கம் செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(05)

# அறநெறிப் பாடசாலை ஆசிரியர்களின் சம்பளத்தை ரூ. 25 ஆயிரமாக்குங்கள்

## சர்வதேச இந்து மதபீடம் ஜனாதிபதியிடம் கோரிக்கை



இலங்கை முழுவதும் உள்ள அறநெறி பாடசாலை ஆசிரியர்களுக்கு சமய நூல் பெறும் பொருட்டு வருடாந்தம் 5000 ரூபா மட்டும் வழங்கப்படுகின்றது. இதனை பத்தாயிரம் ரூபாவாக அதிகரிப்பதற்கு முன்னாள் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ பிரேரனையாக கொண்டு வந்த வேளை அரச மாற்றம் காரணமாக அது கை கூடவில்லை. எனவே ஜனாதிபதி இதனைக் கருத்தில் எடுத்து, பல அறநெறி ஆசிரியர்கள் இது சம்மந்தமாக கலந்துரையாடி இருபத்தைந்தாயிரம் ரூபாவாக அதிகரிக்க வேண்டும் என்ற வேண்டுகோளை தெரிவித்திருக்கிறார்கள்.

அதுமட்டுமல்ல கொரோனா காலத்தில் மாணவர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் கொடுத்திருந்த சீருடைகளும் வழங்கப்படவில்லை. எனவே, மீண்டும் அறநெறி பாடசாலை மாணவர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் சீருடை வழங்குவதுடன் இந்த வருடாந்த கொடுப்பனவை 25 ஆயிரம் ரூபாவாக அதிகரிக்க வேண்டுமென முன்னாள் ஜனாதிபதியின் இந்து மத விவகார இணைப்பாளரும் சர்வதேச இந்து மத பீடச் செயலாளருமான கலாநிதி சிவஸ்ரீ ராமச்சந்திர குருக்கள் பாபு சர்மா அறநெறி பாடசாலைகள் ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் சார்பாக இக்கோரிக்கையை விடுத்துள்ளார்.

ளனவே ஜனாதிபதி இந்த விடயத்தில் கருத்தில் கொள்வார் என்பதில் ஐயமில்லை என சர்வதேச இந்து மத பீட செயலாளர் கலாநிதி சிவஸ்ரீ ராமச்சந்திர குருக்கள் பாபு சர்மா தெரிவித்திருந்ததும் குறிப்பிடத்தக்கது.(05)



# வெல்லவாய வனப்பகுதியில் பரவிய தீ கட்டுப்பாட்டுக்குள்

கொஸ்லந்தை, பூனாகலை - வெல்லவாய வனப்பகுதியில் பரவிய காட்டுத்தீயை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்துள்ளதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

கடும் வறட்சி மற்றும் காற்றுடன் கூடிய வானிலை காரணமாக இந்த வனப்பகுதி முழுவதும் தீ வேகமாக பரவியுள்ளது.

இந்த தீ பரவல் காரணமாக வனப்பகுதி அதிகளவில் சேதமடைந் துள்ளதாக அதிகாரி கள் தெரிவித்தனர்.

இந்நிலையில், தீப் பரவல் திங்கட்கிழமை காலை முற்றாக கட்டுப்படுத்துப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (05)

குறிஞ்சி மலை நகர் Kurinchi Hill City
கொழும்பு - மட்டக்களப்பு A4 வீதியில் 190 ஆவது km இல் 800 m தூரத்தில்
பதுளை மாவட்டம் ஹல்துமுல்லை பிரதேச செயலர் பிரிவு
15 பேர்ச் முதல் 40 பேர்ச் வரையான காணித்துண்டுகள் விற்பனைக்கு!
சுற்றுலா விடுதி, விடுமுறை வீடு ஆகியவற்றுடன் தேயிலை, கோப்பி, கறுவா பயிர்ச்செய்கையும்
அருகில் உள்ள சுற்றுலா மையங்கள்
(100கிமீ சுற்றுவட்டாரத்தில்)
பம்பரகந்த, தியலும, துன்கிந்த, இராவணா, ரம்பொடை உட்பட 10இற்கும் மேற்பட்ட நீர்வீழ்ச்சிகள்
தேசிய சரணாலயங்கள் மற்றும் பூங்காக்கள்
Horton Plains National Park, Hakgala Botanical Gardens
Victoria Park, Kande Ela Educational Forest Park
Lunugamvehera National Park, Yala National Park
Udawalawe National Park
கதிர்காமம் முருகன் கோவில், சீதா அம்மன் ஆலயம், ரம்பொடை ஆஞ்சனேயர் கோவில்

தனியான வாகன தரிப்பிட வசதி
முழுமையான 24 மணிநேர பாதுகாப்பு சேவை
தொடர்ச்சியான பராமரிப்பு ஏற்பாடு
மின்சார இணைப்பு ஏற்பாடு - குடிதண்ணீர் வசதி
உணவகம் - உள்ளக விளையாட்டுத்திடல்
தேயிலை, கோப்பி, கறுவா தொழிற்சாலைகள்
சுற்றுலா ஏற்பாடுகள்
பேர்ச் 200,000/-
பரப்பு 20 இலட்சம்
5th Project
இது ஒரு கற்பகவனம் செயற்திட்டம்
Good Gift Property Developers (Pvt) Ltd

தொடர்புகளுக்கு: 0777 43 5557


கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 071 7354308
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road,
Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இற்கு விசேட விலைக்கழிவாக 30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
Vegitable Fried Rice with Panner & Ghee - 900/=
Chikne Fried Rice with Vegetable - 1150/=
Kothu Rotty With Vegitable In Indian Style
DESSERT
Ice Cream Cup - 60/=
Fruit Salad - 60/=
Ice Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
JUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cocacola M - 70/=
Pepsi M - 70/=
Swehpees Tin - 250/=
Coca Cola Tin - 250/=

# வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் வினோ மீது நடவடிக்கை எடுக்கப்படுமாம்

## ரெலோ மாவட்ட பொறுப்பாளர் அறிவிப்பு







தமிழ் ஈழ விடுதலை இயக்கத்தின் (ரெலோ) வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் வினோநோகராதலிங்கம் மீது நடவடிக்கை எடுக்கப்படும் என கட்சியின் மாவட்ட பொறுப்பாளர் விஜயகுமார் (புளூஸ்) தெரிவித்துள்ளார்.

வவுனியா, விருந்தினர் விடுதி ஒன்றில் தமிழ் பொதுவேட்பாளரை ஆதரிப்பது தொடர்பில் ஞாயிற்றுக்கிழமை மாலை இடம்பெற்ற கூட்டத்தின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அந்தக்கூட்டத்தில்அவர்மேலும்தெரிவித்ததாவது:

தமிழ்பொதுவேட்பாளரைஆதரிக்கும்கட்சிகளில் தமிழீழவிடுதலை இயக்கமும் ஒன்றாகும். ஆனால் அக் கட்சி பொது வேட்பாளருக்கு ஆதரவு தெரிவித்த பின்னர் ஜனாதிபதியை சந்தித்து பேசியுள்ளதுடன், அக் கட்சியின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் வினோநோகராதலிங்கம் ஊடகங்களிலும் சமூக வலைத்தளங்களிலும் பொது வேட்பாளரை விமர்சித்து வருகிறார். இந்நிலையில் ரெலோவின் உண்மையான நிலைப்பாடு என்ன என கூட்டத்தில் கலந்து கொண்டவர்கள் ரெலோ சார்பில் கலந்து கொண்ட பிரதிநிதிகளிடம் கேள்வி எழுப்பியிருந்தனர்.

இதற்கு பதில் அளித்த மாவட்ட பொறுப்பாளர் விஜகுமார் (புளூஸ்), வினோ எம்.பி. தற்போது கட்சியின் எந்தவொரு கட்டமைப்பிலும் இல்லை. அவர் எந்த பதவிகளிலும் இல்லை. அவர் ஒரு சாதாரண உறுப்பினர். அவர் தற்போது பலவிதமாகக் கதைக்கிறார். நாம் கட்சியாக தலைமையின் அனுமதியுடன் இந்த பொது வேட்பாளர் தொடர்பான கட்டமைப்பில் தொடர்ந்தும் பயணிப்போம் எனக் கூறுகின்றேன். இந்தத் தேர்தல் முடியும் முன் அவருக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படும். நாம் பொது வேட்பாளருக்கே ஆதரவு எனத் தெரிவித்தார். (05-100)

# ஆறு கோடாக்களுடன் ஒருவர் கைதானார்

வீரகுள பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மஹவிட பகுதியில் சட்டவிரோதமாகமதுபானம்காய்ச்சுவதற்காகபயன்படுத்தப்படும் 1215 லீற்றர் கொண்ட 06 கோடாக்களை வைத்திருந்த சந்தேக நபர் ஒருவர் சனிக்கிழமை பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மேல் மாகாண வடக்கு குற்றப் புலனாய்வு பிரிவினரால் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின் போதே சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இவர் மாரதென்ன, யக்கல பிரதேசத்தை சேர்ந்த 30 வயதுடையவர் ஆவார்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளில் குற்றப் புலனாய்வு பிரிவினர் ஈடுபட்டு வருகின்றனர். (05)

# பாடசாலை சேவையில் ஈடுபடும் சாரதிகளுக்கு விழிப்புணர்வூட்டல்

(பாறுக் ஷிஹான்)

தேசிய சிறுவர்பாதுகாப்பு அதிகார சபையின் தேசிய வேலைத்திட்டத்தின் கீழ் பாடசாலை மாணவர்களை ஏற்றி இறக்கும் சாரதிகள் மற்றும் அவர்களது உதவியாளர்களுக்கான விழிப்புணர்வு நிகழ்ச்சியானது நேற்று (திங்கட்கிழமை) கல்முனை பிரதேச செயலகத்தில் நடைபெற்றது.

'பிள்ளைகளின் பாதுகாப்பு சாதிகளின் கைகளிலே' எனும் தொனிப் பொருளில் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையின் மாவட்ட சமூக உளநல அதிகாரி யூ. எல். அசார்டீன் ஏற்பாட்டில் நடத்தப்பட்டது.

இதன் போது கல்முனை, சாய்ந்தமருது மற்றும் கல்முனை தமிழ் பிரிவிலுள்ள பாடசாலை சேவையில் ஈடுபடும்40இற்கும்மேற்பட்டசாரதிகள்கலந்துகொண்டனர்.



கல்முனை பிரதேச செயலாளர் ஜெ.லியாகத் அலி வழிகாட்டலில் நிர்வாக உத்தியோகத்தர் ஏ.சி.எம்.பளீல் நெறிப்படுத்தலில் கல்முனை தலைமையக பொலிஸ் போக்குவரத்து பிரிவின் பொறுப்பதிகாரிகள் மற்றும் கல்முனை பிரதேச செயலக சிறுவர் பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் ஆகியோர்களும் கலந்து கொண்டனர்.

மேலும் பாடசாலை மாணவர்களை ஏற்றி இறக்கும் சாரதிகளுக்கான 1929 ஸ்டிகர்களும் பகிர்ந்தளிக்கப்பட்டன. இது தவிர பாடசாலை மாணவர்களை ஏற்றி இறக்கும் சாரதிகள் குறைநிரைகள்ஆராயப்பட்டதுடன்கருத்துக்கள்ஆலோசனைகள் என்பனவும் பெறப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.(05)



காலைக்கதிர் Kalaikkathir

## அதிக வரி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இருக்கும். ஆனால் ஒட்டுமொத்தமாக கடந்த இரண்டு ஆண்டுகளில் அரச வரி வருமானம் பெருமளவு அதிகரித்துள்ளது.

இதன்படி, உள்நாட்டு இறைவரித் திணைக்களம், இலங்கை சுங்கத் திணைக்களம், மதுவரித் திணைக்களம் ஆகிய மூன்று நிறுவனங்களும் 2023ஆம் ஆண்டில் 3 டிரில்லியன் ரூபாயைத் தாண்டி, வரலாற்றில் அதிகூடிய வருமானத்தைப் பெற்றுள்ளன. 25 ஆண்டுகளுக்குப் பிறகு, முதன்மைக் கணக்கில் மேலதிகத்தை உருவாக்க முடிந்தது என்பதையும் கூற வேண்டும்.

இதன்போது, மதுவரித் திணைக்களம் தொடர்பில் அவதானம் செலுத்தினால் 2023 இல் 179 பில்லியன் ரூபாய் வருமானம் கிடைத்துள்ளது. 2024 ஆம் ஆண்டுக்கான இலக்கு 232 பில்லியன் ரூபாயாகும். 2023 ஆகஸ்ட் 22 இல், நாங்கள் 106.5 பில்லியன் ரூபாய் வருமானம் ஈட்டினோம், 2024 ஆகஸ்ட்டில், நாங்கள் 132.7 மில்லியன் ரூபாய் வருமானத்தைப் பெற்றுள்ளோம். அதன்படி, இந்த ஆண்டு 24.6% வளர்ச்சியைக் காட்டுகிறது.

மேலும், அனுமதிப் பத்திரம் வழங்குவதன் மூலம் மதுவரித் திணைக்களத்துக்கு வருமானம் கிடைக்கிறது. மாநகர சபை எல்லையில் 15 மில்லியன் ரூபாய், நகர சபையில் 12.5 மில்லியன் ரூபாய், பிரதேச சபை எல்லையில் 10 மில்லியன் ரூபாய் அறவிடப்படுகிறது. ஒரு உற்பத்தித் தொழிற்சாலைக்கான அனுமதிப் பத்திரம் 25 மில்லியன் ரூபாய்க்கு வழங்கப்படுகிறது.

இவ்வருடம் ஆகஸ்ட் 20 ஆம் திகதி வரை எமது திணைக்களம் 132.4 பில்லியன் ரூபாயை ஈட்டியுள்ளது. 2023 ஆம் ஆண்டில், எங்கள் நிறுவனத்தின் நிலுவைத் தொகை 1040 மில்லியன் ரூபாயாகும். ஆனால் இந்த ஆண்டு பெப்ரவரி மாதத்திற்குள் அதிலிருந்து 609 மில்லியன் ரூபாயை வசூலிக்க முடிந்தது.

ஏனைய அனைத்து வரி நிலுவைகளும் நீதிமன்ற நடவடிக்கைகளுக்கு உட்பட்டவை என்பதைக் கவனத்தில் கொள்ள வேண்டும்.

## மாதாந்தம் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உரையாற்றிய போது அவர் இதனைத் தெரிவித்தார் அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

முட்டாள்தனமான மற்றும் திறமையற்ற அரசாங்கக் கொள்கைகளால் மக்கள் வறுமையில் விழுந்தாலும், அது நிரந்தரமாக இருக்கக்கூடாது. யாருடைய கையும் இன்றி உறுதியான வாழ்வை வாழும் எமது நாட்டு மக்கள் வறுமையின் அடிமைத்தனத்திலிருந்து விடுபட்டுள்ளனர்.

பெண்களை அடிப்படையாகக் கொண்டு வறுமை ஒழிப்பு செயற்றிட்டம்

இதற்காக மாதாந்தம் 20,000 ரூபா நிவாரணம் வழங்கப்படுகின்ற போது 24 மாதங்களில் வறுமையை ஒழிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும். வீடுகளிலேயே அனைத்து விடயங்களையும் நேர்த்தியாகவும் வளமாகவும் முன்னெடுப்பதால் வீட்டில் உள்ள பெண்களுக்கு இந்தச் சலுகை வழங்கப்படும். அவர்களை மையமாகக் கொண்டே இந்த செயற்றிட்டம் முன்னெடுக்கப்படும்.

வறுமை என்பது சுமையல்ல நாட்டை கட்டி எழுப்புகின்ற பின்புலத்தை உருவாக்குகின்றவர் என்ற அடிப்படையில் இந்த நிவாரணங்களை வழங்குகின்றோம். பொய் இல்லாமல் இந்த செயற்றிட்டத்தை முன்னெடுப்போம்.

ஆளும் தரப்பின் நிவாரணங்கள் மாத்திரமில்லாமல் மக்களின் அர்ப்பணிப்பும் தேவை.

பங்களாதேஷில் கிராமிய வங்கி கருத்திட்டத்தின் ஊடாகவும் உலகின் பல நாடுகளிலும் குறுகிய காலத்துக்குள் வறுமைப் பிடியிலிருந்து மீண்டு இருக்கிறார்கள். அதற்கான உதாரணங்கள் உண்டு. இதற்காக ஆளும் தரப்பின் நிவாரணங்கள் மற்றும் குறித்த நபர்களின் அர்ப்பணிப்பு என்பன தேவை. நாடு வீழ்ச்சி அடைந்திருக்கின்ற இந்த சந்தர்ப்பத்தில் இவ்வாறான நிவாரணங்களை மிகவும் சிரமத்திற்கு மத்தியிலே வழங்குவதால் அதை மக்கள் பொறுப்புணர்வுடன் செயல்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும்.

ஐக்கிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் ஊடாக தரமான 50 கிலோ நிறையுள்ள உர மூடையுன்றை 5000 ரூபாவிற்கு வழங்குவோம். மக்களால் சகித்துக் கொள்ள முடியுமான தொகைக்கு உர மருந்துகளை வழங்குவதோடு, இருட்டடிப்பு வர்த்தகத்தை நிறுத்தவும் நடவடிக்கை எடுத்து, இவற்றை கமநல சேவைகள் மத்திய நிலையத்தின் ஊடாக வழங்குவோம். விவசாயிகளுக்கு, மீன்பிடியாளர்களுக்கு, சக்கர வண்டி சாரதிகளுக்கு, பாடசாலை போக்குவரத்து வழங்குனர்களுக்கும் சக்தி அரசி ஆலை உரிமையாளர்களுக்கும் நிவாரண அடிப்படையில் எரிபொருளை வழங்கவும் நடவடிக்கை எடுத்துள்ளோம்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் கொரோனா அச்சுறுத்தல் நாட்டின் வங்கரோத்து நிலை என அனைத்து விடயங்களினாலும் விவசாயிகள் அனைத்து விதங்களிலும் பாதிக்கப்பட்டுள்ளார்கள். தரமற்ற உர விநியோகம், உரத் தட்டுப்பாடு, சேதன உர மோசடி என்பனவற்றினாலும் தமது தங்க ஆபரணங்களையும் சொத்துக்களையும் அடகு வைத்து விவசாயத்தில் ஈடுபட்ட விவசாயிகளுக்கு பாரிய சிக்கல்கள் ஏற்பட்டுள்ளன. எனவே விவசாயிகளுடைய விவசாய கடனை நாங்கள் இரத்து செய்வோம்.

ஆளும் தரப்பில் உள்ள அமைச்சர்களின் நட்புறவாளர்கள், நண்பர்கள், பிணையின்றி கடனைப் பெற்றுக்கொண்டு அவற்றை மீள செலுத்தாமல் கடன்களை நீக்குவோம். வர்த்தகர்களின் கடன்களை இந்த ஆட்சி இரத்து செய்து இருக்கிறது. வர்த்தகர்களின் கோரிக்கைகளுக்கு ஆளும்தரப்புச் செவி சாய்த்தாலும், இந்த வரிய எளிய விவசாயிகளின் கோரிக்கைக்கு ஆளும்தரப்பு செவி சாய்க்கவில்லை. தனது நட்புறவாளர்களுக்காக சட்டத்தை மீறி இரத்து செய்து, கொடுக்கப்பட்ட இந்தக் கடன் தொகைகள் அனைத்தையும் மீண்டும் பெற்றுக்கொண்டு விவசாயிகளின் கடன்களை நீக்க ஆளும் தரப்பு நடவடிக்கை எடுக்கும் என்றும் இதன்போது எதிர்க்கட்சித் தலைவர் சுட்டிக்காட்டினார்.

அத்தோடு விவசாயிகளின் உற்பத்திகளுக்கு நிர்ணய விலை ஒன்றை பெற்றுக்கொடுப்பதோடு, பெரும் ஆலை உரிமையாளர்களின் தந்திரமான ஒப்பந்தங்களின் ஊடாக விவசாயிகளின் நெல்லை குறைந்த விலைக்கு கொள்ளையடிப்பது தடுக்கப்படும். அவர்களை அசௌகரியத்துக்கு உள்ளாக்கி இருக்கின்றார்கள். எனவே, இந்த விவசாயிகளின் நெல்லுக்கு நிர்ணய விலையை ஏற்படுத்தி, அவர்கள் இலாபத்தை பெற்றுக்கொள்வதோடு, நுகர்வோருக்கும் தகுந்த விலையில் அரிசியை பெற்றுக்கொள்ளும் விதமாக விலைசூத்திரமொன்றை அறிமுகப்படுத்துவோம் என்றார்.

## ஜனாதிபதி ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அதாவது எமது பொது வேட்பாளரின் கொள்கை தொடர்பில் ரணிலிடமும், சஜித்திடமும் தெளிவாகக் கூறினோம். அவர்களும் அதனை ஏற்றார்கள். அதேநேரம் அவர்கள் தமக்கு ஆதரவு வழங்குமாறு கேட்கவில்லை. தமிழ் வேட்பாளரை நிறுத்துவது உங்கள் ஜனநாயக உரிமை, உங்களுடைய கோரிக்கை தொடர்பில் நாம் கரிசனை செலுத்துகின்றோம் என்று அவர்கள் தனித்தனியே தெரிவித்தார்கள்.

நாங்கள் அவர்களின் கருத்து தேர்தலுக்கான கருத்தா? அல்லது உண்மையில் தமிழ் மக்கள் தொடர்பில் கரிசனையாக உள்ளனரா? என்பது தொடர்பில் எமது பொதுக் கட்டமைப்புடன் ஆராய்ந்து பதில் தருவோம் எனக் கூறினோம். இந்தச் சந்திப்பின் பின்னர் ஜனாதிபதி வேட்பாளர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு ரெலோ ஆதரவு வழங்கப் போவதாகச் சில விஷமிகள் பொய்ப் பரப்புரை செய்தனர். அது மட்டுமல்லாது அண்மையில் இலங்கைக்கான சுவிஸ் தூதர் பொதுக் கட்டமைப்பு சார்ந்தவர்களை யாழ்ப்பாணத்தை சந்தித்தார். இந்தச் சந்திப்பில் நாடாளுமன்ற உறுப்பினரான சித்தார்த்தன் பங்குபற்றிய நிலையில் நாங்கள் பங்குபற்றவில்லை என்பதைக் காரணமாக வைத்து சிலர் விஷமப் பிரச்சாரம் செய்தனர். சிவில் அமைப்புப் பிரதிநிதிகளைச் சந்திப்பதற்காகவே சுவிஸ் தூதுவர் யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்தார். திடீரென்று ஒழுங்குபடுத்தப்பட்ட சந்திப்பு என்பதால் எமது கட்சியின் தலைவர் நாடளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் அதில் பங்குபற்ற முடியவில்லை.

எமது கட்சி தமிழ்ப் பொது வேட்பாளரை ஆதரிப்பது என்ற முடிவு ஏற்கனவே அறிவிக்கப்பட்டுள்ள நிலையில் பொது வேட்பாளரின் அடுத்த கட்ட நடவடிக்கை தொடர்பில் கலந்துரையாடவுள்ளோம் -- என்றார்

## நோயாளர் காவு ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

காவு வண்டியிலிருந்து திடீரென குதித்த ஒரு பெண் தன்னைக் கடத்திச் செல்கிறார்கள் என்று கூக்குரலிட்டதைத் தொடர்ந்து அங்கு கூடியவர்கள் சாதிரைய நையப்புடைத்தனர்.

வவுனியா - மன்னார் வீதியில் நேற்று மாலை இந்தச் சம்பவம் இடம்பெற்றது. சம்பவம் பற்றித் தெரிவிக்கப்படுவதாவது:

வவுனியா வைத்தியசாலையில் இருந்து பம்பைமடு பகுதியில் உள்ள ஆயுள்வேத வைத்தியசாலைக்கு நோயாளர் காவு வண்டியில் சாப்பாடு கொண்டு செல்லப்பட்டது. வண்டி வவுனியாவுக்குத் திரும்பியபோது வீதியில் நின்ற ஆயுள்வேத பெண் வைத்தியர் ஒருவர் அந்த நோயாளர் காவு வண்டியை மறித்து அதில் ஏறியுள்ளார்.

வவுனியா நோக்கிச் சென்ற நோயாளர் காவு வண்டி வேப்பங்குளம் பகுதியில் உள்ள எரிபொருள் நிரப்பு நிலையத்தில் எரிபொருளை நிரப்பிவிட்டு, மீண்டும் மன்னார் வீதி ஊடாக பம்பைமடு நோக்கிப் புறப்பட்ட நிலையில் நோயாளர் காவு வண்டியில் இருந்த பெண் வைத்தியர் நோயாளர் காவு வண்டி கதவைத் திறந்து கீழே குதித்துள்ளார். தன்னைக் கடத்திச் செல்ல முயற்சிக்கிறார்கள் என்று குரல் எழுப்பியுள்ளார்.

கீழே குதித்த பெண் வைத்தியர் காயமடைந்து வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார். நோயாளர் காவு வண்டியை மடக்கிய மக்கள் சாரதி நையப்புடைத்து நெளுக்குளம் பொலிஸில் ஒப்படைத்துள்ளனர்.

இதனையடுத்து கைது செய்யப்பட்டவரையும் நோயாளர் காவு வண்டியையும் நெளுக்குளம் பொலிஸுக்குக் கொண்டு செல்லப்பட்ட நிலையில் வைத்தியசாலை உதவிப் பணிப்பாளர் உள்ளிட்ட குழுவினர் நெளுக்குளம் பொலிஸுக்குச் சென்று நோயாளர் காவு வண்டியை விடுவித்துள்ளதுடன் முறைப்பாட்டை மீளப்பெறச் செய்வதற்கான முயற்சிகளும் இடம்பெற்றன.

இதேவேளை, நோயாளர் காவு வண்டி சாரதி தனது வீட்டுக்குச் செல்ல வாகனத்தைத் திருப்பியபோதே அது தெரியாத சகோதர மொழி பெண் வைத்தியர் அச்சம் காரணமாக அதிலிருந்து குதித்தார் என்று வைத்தியசாலை தரப்பால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## தமிழ் பொது ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தொடர்பில் இந்தக் கூட்டத்தில் விரிவாக ஆராயப்பட்டது. தேர்தல் அறிக்கை தொடர்பான வரைவின் அடிப்படை ஒன்றும் அங்கு முன்வைக்கப்பட்டது. அதனை முழுமையான அறிக்கையாக்கி, தேர்தல் அறிக்கை வடிவத்திற்குக் கொண்டு வந்து விரைவில் வெளியிடுவது என்று தீர்மானிக்கப்பட்டது.

இது தவிர, தென்னிலங்கை வேட்பாளர்களிடம் இருந்து வருகின்ற பேச்சுக்கான அழைப்புக்களை ஏற்பதா இல்லையா என்பது குறித்து இனிவரும் காலங்களில் ஒருமித்து முடிவெடுப்பது, வடகிழக்கில் தேர்தல் பரப்புரைகளை முழு வீச்சில் முன்னெடுப்பது உள்ளிட்ட பல்வேறு தீர்மானங்களும் இந்தக் கூட்டத்தில் எடுக்கப்பட்டன.

இதேவேளை, இன்றைய தினம் எடுக்கப்பட்ட இத் தீர்மானங்கள் அனைத்தையும் தேர்தல் காலம் முடியும் வரையில் அரசியல் கட்சிகளும் சிவில் சமூகத்தினரும் கடைப்பிடிக்க வேண்டுமென்றும் முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

இக் கூட்டத்தில் பொதுக் கட்டமைப்பில் அங்கம் வகிக்கின்ற வடகிழக்கில் உள்ள அரசியல் கட்சிகளின் தலைவர்கள் மற்றும் தமிழ் மக்கள் பொதுச் சபையின் பிரதிநிதிகளில் சிலர் ஆகியோர் கலந்துகொண்டிருந்தனர்.

## ராஜபக்சக்களின் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதனைத் தெரிவித்தார். அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

நான் அமைச்சராக இருந்த காலத்தில், இவ்வூரைச் சேர்ந்த பலர் முக்கிய பொறுப்புக்களை வகித்திருந்தனர். இவ்வூரின் கடந்தகால கோரிக்கைகள் மற்றும் அபிலாஷைகளுக்கு எதிராக எமது கட்சி செயற்பட்டதில்லை. உள்ளூராட்சி தேர்தலில், எந்தக் கட்சியும் வேட்பாளர்களை நிறுத்தக்கூடாதென பள்ளிவாசல் நிர்வாகத்தினர் கோரினர். எமது கட்சி எவரையும் தேர்தலில் நிறுத்தவில்லை. பாராளுமன்ற தேர்தலிலும் போட்டியிட வேண்டாமென சாய்ந்தமருது பள்ளிவாசல் நிர்வாகத்தினர் வேண்டிக்கொண்டனர். இதற்கும் செவிமடுத்தோம். ஊரினது அல்லது பிரதேசத்தினது தனிப்பட்ட அபிலாஷைகளுக்கு இடைஞ்சலாக எமது கட்சி செயற்படாது.

இவ்வாறுதான், பொத்துவில் பிரதேசத்துக்கு ஒரு எம்.பியை வென்றெடுப்பதற்காக, வேட்பாளர் ஒருவரை எமது கட்சி போட்டியிட வைத்தது. கட்சியின் மீது நம்பிக்கை வைத்தே மக்கள் அவருக்கு வாக்களித்தனர். இப்போது வாக்களித்த மக்களையும், ஊரையும் ஏமாற்றிவிட்டு அவர் கட்சிதாவிச் சென்றுள்ளார். தனிப்பட்ட ஒருவரைப்பற்றி குறைகூறுவதற்கு நான் விரும்பவில்லை. மிகவும் வறுமையான குடும்பத்திலிருந்து வந்த அவரை எமது கட்சி எம்.பியாக்கியது. ஆனால், நன்றி மறந்து, சமூகத்தின் எதிர்பார்ப்புக்களை அலட்சியம் செய்து ஆளும் தரப்புக்குச் சென்றார் முஷார்ரஃப். சென்றது மட்டுமல்ல, எல்லாவற்றையும் மறந்து எங்களை இழித்தும் பளித்தும் விமர்சிக்கிறார். காங்கிரஸ் கட்சிகள் தேவையில்லை என இப்போது வாய்கூசாமல் கூறுகிறார். இளைஞர்களை தவறான வழியில் செல்லாமல் காப்பாற்றியது இக்கட்சிகள்தான்.

நானும், ஹக்கீமும் இல்லாத அமைச்சரவையில் இருப்பதால், மகிழ்ச்சியடைகிறார் என்று வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி சொல்கிறார். உதய கம்மன்பில மற்றும் விமல் வீரவன்ச ஆகியோர் உள்ள அமைச்சரவையே அலி சப்ரிக்கு சந்தோதசமளிக்கிறதா? ஜனாஸாக்களை எரித்தபோது வாயே திறக்காத அமைச்சர் அலி சப்ரிக்கு, இஸ்லாமிய நம்பிக்கைகளுக்காக குரல்கொடுக்கும் எம்மைப் போன்றோர் வெறுப்புக்குரியவர்களாகியுள்ளோம்-என்றார்.



# தமிழ்ப் பொது ஜனாதிபதி வேட்பாளருக்கு வடக்கு கிழக்கில் 50 சதவீத வாக்கு கிட்டும்

## நம்பிக்கை வெளியிட்ட சிவசக்தி ஆனந்தன்

ஜனாதிபதி தேர்தலில் தமிழ் பொது வேட்பாளரான அரியநேத்திரனுக்குவடக்குக்கிழக்கில்உள்ள12லட்சம் வாக்குகளில் 50 வீதமான வாக்குகள் கிடைக்கும் என முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் ஈபிஆர்எல்எப் கட்சியின் செயலாளருமான சிவசக்தி ஆனந்தன் தெரிவித்துள்ளார்.

வவுனியாவில் உள்ள வாடி வீட்டில் பொதுக் கட்டமைப்பின் பிரதிநிதிகளுக்கும், வவுனியாவை சேர்ந்த சிவில் அமைப்பு பிரதிநிதிகளுக்கும் இடையில் இடம்பெற்ற கலந்துரையாடலின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு மேலும் கருத்து தெரிவித்த அவர் -

கடந்த எட்டு ஆண்டுகளாக ஜனாதிபதி தேர்தலில் தமிழ் மக்கள் தொடர்ச்சியாக தென்னிலங்கையைச் சேர்ந்த வேட்பாளர்களுக்கு வாக்களித்திருக்கிறார்கள். தமிழ் மக்கள் காட்டிய அந்த நல்லிணக்க செய்தியை ஆட்சியில் இருந்த எந்த ஜனாதிபதிகளும் தமிழ் மக்களுக்கான ஒரு தீர்வையோ அல்லது போரால் பாதிக்கப்பட்டமக்களுக்கானஅடிப்படைபிரச்சனையோ இதுவரை காலமும் தீர்க்கவில்லை.

ஆகவே அந்த அடிப்படையிலே நாங்கள் ஒரு தமிழ் பொது வேட்பாளரை நிறுத்தியுள்ளோம். வடக்கு கிழக்கில் வாழ்கின்ற தமிழ் பேசும் மக்கள் வடக்கு கிழக்கிற்கு வெளியே இருக்க கூடிய மக்கள் அனைவரும் ஆதரிக்க வேண்டும் என்பதுதான் எங்களது கோரிக்கையாகும். இதற்கான தேர்தல் பிரசாரம் அனைத்து மாவட்டங்களிலும் முன்னெடுக்கப்பட்டு வருக்கின்றது.

வடக்கு கிழக்கிலே 12 லட்சத்திற்கு மேற்பட்ட தமிழ் மக்கள் உள்ளார்கள். அதில் 50 வீதத்துக்கு அதிகமான வாக்குகளை பெறுவதற்கான பணிகளை நாங்கள் ஆரம்பித்து இருக்கின்றோம். நிச்சயமாக இந்தத் தேர்தலிலே தமிழ் மக்கள் மத்தியில் ஒரு விழிப்புணர்வு மற்றும் அரசியல் ரீதியான மாற்றம் ஏற்பட்டிருக்கின்றது. இதில் 50 வீதமான மக்கள் வாக்களிப்பார்கள்என்றுநாங்கள்எதிர்பார்க்கின்றோம்.

உண்மையில்நீண்டகாலமாகதமிழ்மக்களுக்கு ஒரு தேசிய இனப்பிரச்சினை ஒன்று இருக்கின்றது. இதுவரை காலமும் தமிழ் மக்களால் தேர்வு செய்யப்பட்ட ஜனாதிபதிகள் தமிழ் மக்களின் தேசிய இனப் பிரச்சினையை தீர்க்கவில்லை என்கின்ற ஒரு செய்தியை நாங்கள் சொல்ல முனைகிறோம். இந்தப் பிரச்சினை தீர்க்கப்படும் வரைக்கும் தெற்கில் இருக்கின்ற எந்த ஒரு சிங்கள வேட்பாளர்களுக்கும் வாக்களிக்க மாட்டார்கள் என்ற செய்தியையும் கூறுகின்றோம்.

அடுத்து சர்வதேசம் இந்த யுத்தத்தை முடிக்கும் வரையும் பல நாடுகளின் உதவியை பெற்று இந்த யுத்தத்தை முடித்து வைத்தது. யுத்தம் முடிந்த பிற்பாடு தமிழ் மக்களுடைய பிரச்சினைக்கு தீர்வு காணப்பட வேண்டும் என்று இந்த சர்வதேச நாடுகள் உறுதியளித்திருந்தன.

யுத்தம்முடிந்து15ஆண்டுகாலமாகஇருக்கின்றது. ஆனால் சர்வதேச நாடுகளும் தமிழ் மக்களுடைய பிரச்சினையை தீர்ப்பதற்கு எந்த முயற்சியையும் எடுக்கவில்லை. இலங்கை அரசாங்கமும் இந்த பிரச்சினை தீர்ப்பதற்கு எந்த முயற்சியும் எடுக்கவில்லை. ஆகவேதமிழ்மக்களுக்குஒருதேசிய இன பிரச்சனை ஒன்று இருக்கின்றது. யுத்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான பிரச்சினைகள் எதுவும் தீர்க்கப்படவில்லை.

ஒரு புதிய அரசியல் மாற்றத்தை நாங்கள் எதிர்பார்க்கின்றோம். குறித்த கலந்துரையாடலில் ஜனநாயக போராளிகள் கட்சியின் ஊடகப் பேச்சாளர் க.துளசி வர்த்தக பிரமுகர்கள் அரசியல் கட்சிகளின் பிரமுகர்கள் சிவில் அமைப்புகளின் பிரமுகர்களும் கலந்து கொண்டனர்.(05-100)





# சங்கு ஒரு காலத்தின் தேவை அதை மனதில் இருத்த வேண்டும்

## சிறிதரன் எம்.பி.. இடித்துரைப்பு

சங்கு ஒரு காலத்தின் தேவை அதை அனைவரும் மனதில் பதித்து கொள்ள வேண்டும் என நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் கிளிநொச்சியில் இடம்பெற்ற புலம்பெயர் எழுத்தாளர் வல்லிபுரம் சுகந்தனின் இரு நூல்கள் வெளியீட்டு விழாவில் தெரிவித்தார்.

மேற்படி நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு -

'இங்குள் தமிழர்களுக்கு இன்னல் விழைத்தால்சங்காரம்நிஷம்எனசங்கே முழங்கு'என்றபாரதியாரின்கவிவரிக்கு அமைய சங்கு ஒரு காலத்தின் பதிவு. 'சங்கே முழங்கடா தமிழா ஒரு சாதனை படையடாதமிழா'புரட்சிபாடல்களும்உள்ளன. இவையெல்லாம் எமது காலத்தின் தேவையாகவுள்ளது. உங்களுடைய மனங்களில்அவற்றைபதிக்கவேண்டும் எனத் தெரிவித்தார். (05- 113)

# ஜனாதிபதி தேர்தலை புறக்கணிக்க கோரி திருகோணமலையில் துண்டுப்பிரசுரங்கள்

## தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி பரப்புரை



(ஹஸ்பர் ஏ.எச் )

ஜனாதிபதி தேர்தலை புறக்கணிக்க கோரி திருகோணமலையில் தமிழ் தேசிய மக்கள் முன்னணியினர் துண்டுப்பிரசுரங்ளை பொது மக்களுக்கு ஞாயிற்றுக்கிழமை வழங்கினர்.

திருகோணமலைபெரியகடைவீதியில்ஆரம்பித்து சிவன் கோயிலுக்கு முன்னால் வரையான வீதி வரை ஜனாதிபதி தேர்தலை புறக்கணிக்க கோரி துண்டுப்பிரசுரங்களை வழங்கினர்.

இதில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன், திருகோணமலை மாவட்ட அமைப்பாளர் மாவட்ட செயலாளர் உட்பட கட்சி ஆதரவாளர்கள் என பலர் கலந்துகொண்டுமக்களுக்குவீதி வழியாகதுண்டுப்பிரசுரங்களை வழங்கி வைத்தார்கள்.

இதன்போதுஊடகங்களுக்கு கருத்து வெளியிட்ட குறித்த கட்சியின் மாவட்ட செயலாளர் சிறீபிரசாந்த் -

தமிழ் மக்கள் இம்முறை ஜனாதிபதி தேர்தலை புறக்கணிக்க வேண்டும். பொது வேட்பாளர் என்பது வெறும் கண்துடைப்பு இரண்டாம் விருப்புவாக்கைபெரும்பான்மை இனவேட்பாளருக்கு கொண்டு செல்லும்தந்திரோபாயம். ஒற்றை ஆட்சிமுறைஇல்லாமல்ஆக்கப்பட்டுசமஷ்டிஆட்சியை கொண்டு வரும் வரை தமிழ் மக்கள் தேர்தலை புறக்கணிக்க வேண்டும். 13 ஆம் திருத்தத்துக்கு ஆதரவளித்தோரே பொது வேட்பாளருக்கு பின்னால் நிற்கின்றனர். - என்றார்.(05)





# நாட்டின் வெவ்வேறு பிரதேசங்களில் உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட துப்பாக்கிகளுடன் இருவர் கைது

கருவலகஸ்வெள பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பிரதிபாகம பிரதேசத்தில், உள்நாட்டில்தயாரிக்கப்பட்ட துப்பாக்கியுடன் சந்தேக நபர் ஒருவர் சனிக்கிழமை கருவலகஸ்வெள பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

கருவலகஸ்வெள பொலிஸாருக்கு கிடைத்த இரகசியத்தகவலின் அடிப்படையில் மேற்கொண்ட சுற்றிவளைப்பின்போதே சந்தேக நபர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்த நபர் 43 வயதுடைய புத்தளம் பிரதேசத்தை சேர்ந்தவராவார்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளில் கருவலகஸ்வெள பொலிஸார் ஈடுபட்டு வருகின்றனர்.

இதேவேளை, சூரியபுர பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சமகிபுர பிரதேசத்தில் உள்நாட்டில்தயாரிக்கப்பட்ட துப்பாக்கியுடன் ஒருவர் சனிக்கிழமை சூரியபுர பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

கந்தளாய் பிரிவின் ஊழல் தடுப்பு பிரிவின் அதிகாரிகள் குழுவினால் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின்போதே இந்த நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைதான நபர் ஈச்சிலம்பற்று பிரதேசத்தை சேர்ந்த 36 வயதுடையவர் ஆவார்.

(05)

# தொடருந்து விபத்தில் ஒருவர் உயிரிழப்பு

ஹபரணை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பலுகஸ்வெள பிரதேசத்தில் கொழும்பில் இருந்து திருகோணமலை நோக்கி பயணித்த ரயிலில் மோதி ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இந்த சம்பவம் சனிக்கிழமை இடம்பெற்றுள்ளது.

உயிரிழந்தவர் பலுகஸ்வெள பகுதியைச்சேர்ந்த 36 வயதுடையவர் ஆவார்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை ஹபரணை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (05)

காலைக்கதிர் Kalaikkathir

# திருகோணமலை நகரின் வளங்களை சூரையாடாதவருக்கு வாக்களிப்போம்

## சுகத் பிரசாந்த தெரிவிப்பு




ஜனாதிபதி தேர்தலில் நாங்கள் சஜித் பிரேமதாஸவுக்கு எல்லோரும் உதவி செய்ய வேண்டும் என்று தீர்மானம் எடுத்துள்ளோம் என தேசிய ஐக்கிய நல்லிணக்க முன்னணி கட்சியின் தலைவர் ஏ.எல். சுகத் பிரசாந்த தெரிவித்தார்.

திருகோணமலையில் உள்ள அவரது கட்சி காரியாலயத்தில் நடைபெற்ற ஊடக சந்திப்பின் போதே இவ்வாறு தெரிவித்தார்.

தொடர்ந்தும் அவர் தெரிவிக்கையில் -

இதற்கு காரணம் கடந்த கால அரசாங்கம் ரணில் விக்கிரமசிங்க இந்த ஆட்சியினுடைய தலைவராக இருந்தார். அவரை நாங்கள் பார்த்தோம் இந்த திருகோணாமலைக்கு என்ன நடந்தது நாட்டைப் பற்றி யோசிக்க முன்னர் எங்களுடைய திருகோண மலையை பற்றி யோசிக்க வேண்டும்.

இந்த நாட்டின் முக்கியமான ஒரு இடம்தான் திருகோணாமலை பொருளாதாரம் ஏனைய விடயங்களுக்கும் முக்கியமாக இருக்கிறது. ஜனாதிபதியால் அனுப்பப்பட்ட ஆளுநர் அவருடைய நோக்கங்களை செய்வதற்காக அனுப்பி உள்ளார் அவர் நினைக்கிற மாதிரி இந்த திருகோணமலையில் உள்ள காணிகள், வளங்கள் அனைத்தையும் வெளிநாட்டுக்கு பெரிய பெரிய கம்பெனிகளுக்கு விற்பனை செய்கிறார்கள்.

இது எங்கள் கண்முன்னால் நடக்கிறது இதை யாரும் கேட்பார் இல்லை. நாங்கள் மாத்திரம் தான் இதனை எடுத்துச் சொன்னோம். இதனைக் காப்பாற்றினோம் மக்களுக்காக வேண்டி நாங்கள் செய்தோம்.

இந்த நாட்டில் உள்ள அரசியல்வாதி கட்சிகள் எதுவும் செய்யவில்லை சிங்கள கட்சி முஸ்லிம் கட்சி தமிழ் கட்சி யாரும் பேசவில்லை.

அனுகுமார திசாநாயக்காவும் இவை பற்றி பேசவில்லை ஆனால் சஜித் பிரேமதாஸ மட்டும் கதைத்துள்ளார். மக்களிடம் இருந்துதான் காசு வாங்கி இந்த அரசாங்கம் நாட்டை நடத்தி கொண்டிருக்கின்றார்கள். இந்த முறை நீங்கள் சஜித் பிரேமதாஸவை நாட்டின் தலைவராக உருவாக்குவதற்கு ஜனாதிபதிஸ்ரீ தேர்தலில் ஆக்குவதற்கு வாக்குகளை அளியுங்கள். - என்றார். (05)

# காதுகளால் வாகனம் இழுத்து சாதனை









தென்மராட்சியைச் சேர்ந்த செல்லையா திருச்செல்வம், 1500 கிலோகிராம் எடையுள்ள ஹை-ஏஸ் வாகனத்தை 100 மீற்றர் தூரம் தனது இரு காதுகளில்கட்டிஇழுத்துசாதனை படைத்துள்ளார்.

ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணியளவில் யாழ். கொடிகாமம், நட்சத்திர மஹால் முன்றிலில் ஏ9 வீதியில் இந்த சாதனை நிகழ்த்தப்பட்டது.

வாகனத்தை வெற்றிகரமாக காதுகளால் இழுத்து சாதனை புரிந்தசெல்லையாதிருச்செல்வம் இதன்போதுகௌரவிக்கப்பட்டார்.

இதேவேளை, தமிழ்நாடு, கொழும்பு, யாழ்ப்பாணம் என முன் னர் பல தடவைகள் செல்லையா திருச்செல்வம், தனது தாடியால் பல்வேறு வாகனங்களைஇழுத்துசாதனை படைத்து சோழன் உலக சாதனை புத்தகத்தில் இடம்பிடித்துள்ளார்.(05)

# 1948இல் நாட்டுக்கு சுதந்திரம் கிடைத்தாலும் தமிழ் மக்களுக்கு இன்னும் கிடைக்கவில்லை

## சண்முகம் குகதாசன் எம்.பி. இடித்துரைப்பு



இலங்கைதீவுக்கு1948ஆம் ஆண்டுசுதந்திரம்கிடைத்தாலும் தமிழ் மக்களுக்கு இன்னும் கிடைக்கவில்லை என இலங்கைதமிழ்அரசு கட்சியின் திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கதிரவேலு சண்முகம் குகதாசன் தெரிவித்தார்.

திருகோணமலைஆனந்தபுரி விளையாட்டு மைதானத்தில் நாடாளுமன்ற உறுப்பினரை வரவேற்று கௌரவிக்கும் நிகழ்வு சனிக்கிழமை மாலை இடம்பெற்றது. அதில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே இவ்வாறு தெரிவித்தார்.

தொடர்ந்து அவர் தெரிவிக்கையில் -

இலங்கைத் தமிழரசுக் கட்சி 75 வருடங்களாகஇழந்தஉரிமைகளை பெறுவதற்காக போராடி வருகிறோம். இந்த பகுதியில் சுமார் 3000 மீனவக் குடும்பங்கள் வாழ்ந்து வருகின்றன. இங்கு குடியிருக்கும் மக்களுக்கு காணி உரிமம் இல்லை. இது தொடர்பில் உரிய அமைச்சர்களுடனும் அதிகாரிகளுடனும்பேசியுள்ளதுடன்நாடாளுமன்றத்தில்கூடபேசியுள்ளேன்.

மக்கள் உரிமைகளை விட பல கிராமங்களுக்கு செல்லும்போது வாழ்வாதாரம்வீதிஅபிவிருத்திகளைபற்றியேசிந்தித்துக்கொண்டிருக்கின்றனர். உரிமைகள்விடுதலைப்போராட்டங்கள்உரிமைகளைமற்றும்அபிவிருத்தி போன்றவைகளையும் சமாந்தரமாக கொண்டுசெல்ல வேண்டும்.

மீனவ சமூகத்தின் பல பிரச்சினைகளுள் ஒன்றாக சுருக்கு வலை காணப்படுகிறது. இங்குள்ள மீனவர்கள் கடலுக்கு சென்று காணாமல் போயுள்ளனர். சல்லி பகுதியில் இரு மீனவர்கள் காணாமல் போயுள்ளனர். எனவே, எல்லோரும் இணைந்ததான தீர்வுகளை பெற்றுக் கொடுப்போம். - என்றார். (05)

# யாழ்பாணத்தில் பெண்ணிடம் 22 லட்சம் ரூபா பண மோசடி

## ஒருவர் கைது

பெண்ணொருவரிடம் சுமார் 22 லட்சம் ரூபா பணம் பெற்று மோசடியில் ஈடுபட்ட ஆணொருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

யாழ்ப்பாணத்தை சேர்ந்த பெண்ணிடம் சுமார் 22 லட்ச ரூபா பணத்தினைபெற்றுஏறாவூர்பகுதியைசேர்ந்தநபர் மோசடி செய்துள்ளார்.

இது தொடர்பாக பாதிக்கப்பட்ட பெண் யாழ்ப்பாண பொலிஸ் நிலையத்தில்முறைப்பாடு செய்ததை அடுத்து, விசாரணைகளை முன்னெடுத்த பொலிஸார் ஏறாவூர் பகுதியை சேர்ந்த நபரை கைது செய்துள்ளனர்.

சந்தேக நபரிடம் விசாரணைகளை முன்னெடுத்த பின்னர், அவரை நீதிமன்றில்முற்படுத்தநடவடிக்கை எடுத்து வருவதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். (05)

# பன்றி தாக்கி பெண் சாவு

யாழ்ப்பாணத்தில் பன்றியின் தாக்குதலுக்கு உள்ளான வயோதிப பெண்ணொருவர் சனிக்கிழமை உயிரிழந்துள்ளார்.

நெடுந்தீவு 15ஆம் வட்டாரம் பகுதியை சேர்ந்த 80 வயது வயோதிப பெண்ணே உயிரிழந்துள்ளார்.

பெண்ணின் வீட்டுக்கு அருகில் வசிக்கும் நபர் ஒருவர் பன்றிகளை வளர்த்து வருகிறார்.

இந்நிலையில் கடந்த வெள்ளிக்கிழமை வயோதிப பெண் தனது வீட்டுக்கு அருகில் நின்றிருந்த வேளை அயல் வீட்டில் வளர்த்த பன்றி அவரை தாக்கியுள்ளது.

இதில் படுகாயமடைந்த மூதாட்டி நெடுந்தீவு பிரதேச வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார். அதனையடுத்து, அவர் மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்ட பின்னரே சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார். (05)

# தாயுடன் நீராடச் சென்ற 7 வயதுப் பிள்ளை சாவு; தாயையும் 5 வயதான பிள்ளையையும் காணோம்

குருநாகல் தெதுரு ஓயாவில் தாயுடன் நீராடச் சென்ற 7 வயது பிள்ளை நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

தாயுடன் நீராடச் சென்ற 5 வயதுடைய மற்றைய பிள்ளையையும் தாயையும் காணவில்லை என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

உயிரிழந்த7வயதுபிள்ளையின்சடலம்மூக்கலனாய கிராமிய வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

மேலும்நீரில்மூழ்கிகாணமல்போன 33வயதுடைய தாய் மற்றும் 5 வயதுடைய பிள்ளையைத் தேடும் பணிகளை பொலிஸார் ஆரம்பித்துள்ளனர். (05)

காலைக்கதிர் Kalaikkathir

# கிழக்கு மாகாண கல்வித் துறையில் அராஜகம் அநீதியான செயற்பாடுகளுக்கு இடம்கொடோம்

## ஜோசப் ஸ்டாலின் கல்முனையில் தெரிவிப்பு




(ஏ.எல்.எம்.ஷினாஸ்)

கிழக்கு மாகாண கல்வித் துறையில் ஆசிரியர்களுக்கும், அதிபர்களுக்கும் பாரிய அநீதிகள் தொடர்ச்சியாக இழைக்கப்பட்டு வருகின்றன. இங்கு கல்வி துறையில் பாரிய அராஜகம் நடைபெறுகிறது. இதனைத் தொடர்ந்தும் பார்த்துக் கொண்டிருக்க முடியாது என இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச்செயலாளர் ஜோசப் ஸ்டாலின் கல்முனையில் வைத்து ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்தார்.

முறையற்ற ஆசிரியர் இடமாற்றம் தொடர்பாக இலங்கை ஆசிரியர் சங்கத்தால் கல்முனை மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் செய்யப்பட்ட வழக்கு மற்றும் நீதிக்கு புறம்பான மருதமுனை ஷம்ஸ் அதிபர் நியமனம் தொடர்பாக மன்றுக்கு வருகை தந்த போது இலங்கை ஆசிரியர் சங்கத்தின் செயலாளர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்தார்.

தொடர்ந்து இங்கு கருத்து தெரிவித்த ஜோசப் ஸ்டாலின் -

கல்முனைமேல்முறையீட்டுநீதிமன்றத்தில் மூன்றுவழக்குகள்எடுக்கப்பட்டன. முறையற்ற ஆசிரிய இடமாற்றம், அநீதியான அதிபர் நியமனம் மற்றும் ஆசிரியர் இருவரால் போடப்பட்ட மேல்முறையீடு ஆகிய வழக்குகள் முன்னெடுக்கப்பட்டிருந்தன. கல்முனை மேல்முறையீட்டு நீதிமன்றத்தில் கிழக்கு மாகாணகல்விதுறைதொடர்பாக14வழக்குகள் முன் வைக்கப்பட்டிருக்கின்றன. ஏன் இந்த நிலை? சரியான நீதி இங்கு இல்லை. நீதி இல்லாத ஒரு மாகாணமாக கிழக்கு மாகாணகல்வித்துறைகாணப்படுகிறது. நீதியைப் பெற்றுக் கொள்வதற்காக இன்று ஆசிரியர்களும் அதிபர்களும் நீதிமன்றத்திற்கு வர வேண்டிய துர்பாக்கிய நிலை ஏற்பட்டுள்ளது. கிழக்குமாகாணத்தில்உயர்பதவிகளில் உள்ள ஆளுநர், பிரதம செயலாளர், கல்விச் செயலாளர், பணிப்பாளர்கள் என்ன செய்து கொண்டிருக்கிறார்கள்? கிழக்கு மாகாண கல்வி பணிப்பாளரின் செயற்பாடு பிள்ளையானுக்கு அவசியமானதை செய்வது போல் தெரிகிறது. ஆசிரியர் இடமாற்றத்திற்கு ஒரு நாளைக்குள் விண்ணப்பம் கோரியமை சதி திட்டம் இல்லையா?

மருதமுனை ஷம்ஸ் மத்திய கல்லூரி அதிபர் நியமனத்தில் பாரிய முறைகேடுகள் இடம் பெற்றுள்ளது. இதற்கு யார் காரணம்? அதிபரின் கல்வி தகுதிகளுக்கு வழங்கப்பட வேண்டிய புள்ளி திட்டங்கள் சரியாக வழங்கப்படாமல் அவருடைய சிரேஷ்ட அதிபர் சேவை புறக்கணிக்கப்பட்டிருக்கிறது. இந்த அதிபர் நியமனம் முறையாக நியமிக்கப்படவில்லை. இங்கு பாரபட்சம் காட்டப்பட்டுள்ளது. கல்வி பணிப்பாளர் நீதிமன்றம் வந்து அழுது வேலை இல்லை. நீதிமன்றத்திற்கு வழக்குகள் வந்ததும் தீர்வாக சமரசம் செய்வதும் கல்வி துறையில் பணியாற்றுபவர்கள் அதனை சமரசம் செய்ய முயற்சிப்பதும் வெட்கித் தலைகுனிவதும் கிழக்கு மாகாண கல்வி துறைக்கு கிடைத்த சாபக்கேடு ஆகும்.

கல்வி அதிகாரிகள் நீதியாக செயற்பட வேண்டும். 14 வழக்குகளையும் முன்னெடுப்பதற்கு குறித்த ஆசிரியர்கள் அதிபர்கள் எவ்வளவு செலவு செய்திருப்பார்கள். நீதி கேட்டு நீதிமன்றத்திற்கு இவர்கள் வராமல் எங்கு செல்வது?. இவர்களுடைய செலவுக்கு யார் பொறுப்பாவது? எங்களுக்கு நீதிதான் தேவை. அரசு அதிகாரிகள் அவர்களின் வாகனம், போக்குவரத்து, எரிபொருள் செலவு, சட்டத்தரணி கொடுப்பனவு என இவைகள் எல்லாம் அரசு செலவுகளில் தான் செய்யப்படுகிறது. இது யாருடைய நிதி? கிழக்கு மாகாண கல்வி துறையை நீதியான இடமாக மாற்ற வேண்டும். நாங்கள் கிழக்கு மாகாண மக்களுக்கு சொல்லுகிறோம் எந்த நாளும் நீதிமன்றத்திற்கு வர முடியாது. பல பிரச்சினைகள் இருக்கின்றன. நீதியான இடமாக இதை மாற்ற நாம் எல்லோரும் ஒன்றுபட வேண்டும்.

ஆளுநர், பிள்ளையானுக்கு பயப்படுகிறாரா? நீதியை கொடுக்க பயமா? கல்வித்துறை அதிகாரிகள் எதற்கு இருக்கிறார்கள்? அவர்கள் என்ன பொம்மைகளா? இடமாற்றங்கள், முறைகேடான கல்வித்துறை செயற்பாடுகளை கிழக்கு மாகாண கல்வி திணைக்களம் நிறுத்த வேண்டும் நிறுத்தாத வரை இலங்கை ஆசிரியர் சங்கம் போராடும். அநீதியான செயல்பாடுகளுக்கு இடம் கொடுக்க மாட்டோம். இதனை நாம் உறுதியாகச் சொல்கிறோம். கல்வி அதிகாரிகள் சரியான தீர்மானம் எடுக்க வேண்டும். இல்லாவிட்டால் நமது அடுத்த கட்ட நடவடிக்கைக்கு நாம் ஒருபோதும் தயங்க மாட்டோம் என்று தெரிவித்தார்.

இதன் போதும் இலங்கை ஆசிரியர் சங்கத்தின் மாவட்டமட்ட இணைப்பாளர்களும் கலந்து கொண்டனர்.(05)




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House (Pvt) Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 27.08.2024இல் வெளியிடப்பெற்றது